

JESUS REDEEMS MINISTRIES

# உயிர் உலகம்

மலர் 13 | இதழ் 12 | பிப்ரவரி 2022 | ஆண்டு சந்தா ₹100

நம்முடைய தேவன் அவருடைய ஒரே குமாரனாகிய
இயேசு கிறிஸ்துவை நமக்காக தந்து

## அன்பு கூர்ந்தார்




இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவது இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக அவர்களுக்கென்று மாதம் தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whatsapp மூலமாகவோ 9750955547 என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

## உள்ளே...

அம்மாவின் விசுவாசம் 04
தேவ அன்பு 11
தேர்வுக்கான ஆலோசனைகள் 28
*Coffee with* பத்திரிக்கையாளர் 32

வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தை கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!

*அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால், உடனே உங்கள் சந்தாவைப் புதுப்பிக்க மறவாதிருங்கள்! Mo/Cheque/DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை 9750955547 என்ற எண்ணுக்கு தெரியப்படுத்துங்கள்.*

**Bank detail**
A/C name: **JESUS REDEEMS YOUTH MINISTRY**
A/C No: **054100710400515**
Bank: **TAMILNAD MERCANTILE BANK LTD.,**
Branch code: **000054**
IFS Code :**TMBL0000054**
MICR code: **627060021**
SWIFET code: **TMBLINBBTUT**

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211. போன் : 04639 - 353333 | செல் : 9750955547

ஆசிரியர்: மோகன் சி. லாசரஸ் | இணை ஆசிரியர்: அவினாஷ் | ஆசிரியர் குழு: வயலா ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் | ரவி | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜான்
வடிவமைப்பு : டேனியல்ராஜ்



# தலைவாசல்

அன்பான
இளம்
நெஞ்சங்களுக்கு!


அது ஒரு கடுமையான குளிர்காலம். குளிர் ஆடைகள் இல்லாமல் வெளியில் யாரும் செல்ல முடியாத நிலை. ஒரு ஆதரவற்ற ஏழை தாய் தன்னுடைய 2 வயது குழந்தையை மார்பில் அணைத்தவாறு சாலையில் நடந்து சென்றுக் கொண்டிருந்தாா். குளிர் அதிகமாக இருந்ததால், ஒரு பூங்காவினுள் சென்று தன்னுடைய குழந்தையைப் பத்திரப்படுத்தி வைத்தாள். ஆனால் குளிர் அதிகமானதால் நடக்கவே முடியாத சூழல் உருவானது. ஒரு பாலத்தின் அடியில் சென்று தன்னுடைய குழந்தையைக் காப்பாற்ற நினைத்தாள். 2 வயது குழந்தை குளிரால் நடுங்க துவங்கியது. அதனால் தன்னுடைய ஒவ்வொரு ஆடைகளையும் கழற்றி அந்த குழந்தையை மூடி காப்பாற்ற முயன்றாள். கடைசியில் தன்னுடைய மொத்த ஆடைகளையும் கொண்டு அந்த குழந்தையை முழுவதும் மூடி, குளிர் தாக்காதபடி செய்தாள். ஆனால் சில மணி துளிகளில் அவள் அந்த குளிரிலே உறைந்து மரித்துப் போனாள்.

சில மணி நேரம் கழித்து அந்த பக்கம் வந்த ஒரு தம்பதியினர், குழந்தையின் அழுகை சத்தத்தைக் கேட்டு வந்து, அந்த குழந்தையைக் காப்பாற்றினர். ஆனால் அந்த தாய், அந்த கொடிய குளிரில் உறைந்த பனிக்கட்டியை போல் மரித்துப் போயிருந்தாா். அந்த சிறுவனை அந்த தம்பதியினர் எடுத்து வளர்த்து வந்தனர். ஒரு நாள் அந்த தம்பதியினர் ஒரு கல்லறைக்கு அவனை அழைத்து சென்று, தம்பி இது தான் உன்னை உயிரோடு வாழ வைப்பதற்காக தன்னையே மாய்த்துக் கொண்ட, உன்னை பெற்றெடுத்த தாயின் கல்லறை என்று கண்ணீரோடு சொன்னார்கள். தன்னுடைய தாயின் தியாகத்தை உணர்ந்து கண்ணீர் மல்க அழுதான்.

எனக்கு அன்பான வாலிபனே, இதேபோல் நம்முடைய தேவன் அவருடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக தந்து அன்பு கூர்ந்தார். அநேக நேரம் இந்த உண்மையான அன்பை நம்மால் புரிந்துக் கொள்ள முடிவதில்லை, இயேசுவின் அன்பை மறந்து உலக அன்பிலும், உலக ஆசையிலும், மாயையான வலையிலும் விழுந்து எழும்ப முடியாமல் தவிக்கின்றோம், திகைக்கின்றோம்.

இயேசுவின் அன்பினை அறிவிப்பதில் அவசரத்தையும், முக்கியத்துவத்தையும் தேவபிள்ளைகள் அறியாமல் இருப்பதே வேதனையான ஒன்று.

அநேக நேரம் சுயநலமாகவே இருக்கிறோம். இயேசுவை நான் அறிந்திருக்கிறேன் அதுபோதும், நான் பரிசுத்தமாக இருக்கிறேன் அதுபோதும், மற்றவர்களைக் குறித்து எனக்கு எந்த அக்கரையும் இல்லை, ஒரு வாலிபன் பாவம் செய்து தேவனை விட்டு விலகி நரகத்துக்குப் போனால் நான் எப்படி காரணமாக முடியும்?



**நீ அறிவிக்காததின் விளைவு என்ன தெரியுமா?**

- இயேசுவை அறியாததால் இந்தியாவில் இன்னும்குடியின் அடிமைத்தனத்தில் 16 கோடி பேர் உள்ளனர்.
- இயேசுவின் விடுதலையை அனுபவிக்காததால் இன்னும் ஆபாச வலைத்தளத்தில் 44% (18-24 வயதினர்) உள்ளனர்.
- இயேசுவின் அன்பை உணராமல் உள்ளங்கள் தற்கொலை செய்து 1,64,033 பேர் மரித்துள்ளனர்.
- இயேசுவின் வல்லமையை அறியாததினால் போதை பழக்கத்தில் 3 கோடி பேர் சிக்கியுள்ளனர்.

இதுவே நம் இந்திய தேசத்தின் அவல நிலை. நீ இயேசுவின் அன்பை அறிவித்தால் மட்டுமே நம் ஜனத்துக்கு விடுதலை உண்டு! மீட்பு உண்டு! இரட்சிப்பு உண்டு!

**உனக்காக தன் ஜீவன் தந்தவரை உன் ஜீவன் முடியும் வரை பகிர்வது மேன்மை!** ■

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

சாட்சி தொகுப்பு : ஜிஷ்யா

# அம்மாவின் விசுவாசம்


அபிநயா

இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்து, தன் தகப்பனாரின் எதிர்ப்பையும் பாராமல், தாயாரின் வழிகாட்டுதலின் படி, ஜெபித்து இன்றைக்கு அநேக வாலிபர்களை கர்த்தர் பக்கமாக நடத்திக் கொண்டிருக்கும் சகோதரியின் சாட்சியை தான் இந்த மாதம் நாம் பார்க்கப் போகிறோம்...

### உங்களது சிறு பிராயம் பற்றி சொல்லுங்களேன்?

என்பெயர்அபிநயா, நான்தென்காசிமாவட்டம்வேலப்பநாடாரூர்என்ற கிராமத்தில் திரு. செல்வராஜ், திருமதி சரஸ்வதி தம்பதியருக்கு இரண்டாவது மகளாகப் பிறந்தேன். எனக்கு நர்மதா என்ற சகோதரி இருக்கிறாள். என் அம்மா சிறு வயதிலேயே இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதால், என்னையும் என் அக்காவையும் ஆண்டவருக்குள் வழிநடத்தி னார்கள். தினமும் வேதத்தை வாசிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்து வளர்த்தார்கள். ஆனாலும் நான் அப்பாவுடன் கோயிலுக்கும் போவேன்.

### சரி... உங்களுடையப் பள்ளிப்பருவம் பற்றி சொல்லுங்களேன்?

நான் சிறு வயதிலிருந்தே சுமாராகத்தான் படிப்பேன். வீட்டில் எல்லோரிடமும் மிகவும் கோபப்படு வேன். பெற்றோர் சொல்லும் எதற்குமே உடனே கீழ்ப்படிய மாட்டேன், ஆனால் எப்பொழுது படிக்க ஆரம்பித்தாலும், ஜெபித்து விட்டு தான் பாடங்களைப் படிக்க ஆரம்பிப்பேன். நான் ஜெபிப்ப தையோ, வேதம் வாசிப்பதையோ அப்பா பார்த்தால் அதிகமாக திட்டுவார்கள். ஆனால் நான் சில நாட்களுக்குப்பின் நல்ல மதிப்பெண் வாங்குவதையும் என்னுடைய சுபாவத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் பார்த்து, என் அப்பாவே வேதத்தை எடுத்துக் கொடுத்து வாசிக்க சொல் வார்கள்.

### சூப்பர்... வேதத்தை வாசிப்பீர்கள், கோவிலுக்கும் சென்று வருவீர்கள்... உங்களது சிறுபிராய அனுபவத்தை சொல்லுங்களேன்?

ஒருநாள் குடும்பத்தோடு வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது, கர்த்தர் முழு குடும்பத்தின் பாதுகாப்பிற்காக ஜெபிக்கச் சொன்னார். அப் பொழுது ஏன்? எதற்காக? ஜெபிக்க சொல்லுகிறார் என்று புரியவில்லை, ஆனாலும் உடனே ஜெபித்தேன். அன்று நாங்கள் குளித்துக்கொண்டி ருக்கும் போது, என்னோடு சேர்ந்து ஐந்து பேர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டோம். ஆனால், கர்த்தர் அதிலிருந்து

அபிநயாவின் பெற்றோம் மற்றும் சகோதரி





அற்புதமாக எங்களை காப்பாற்றினார். இதற்காகத்தான் ஜெபிக்க சொன்னார் என்று அப்பொழுதுதான் தெரிந்தது. ஒரு நாள் நான் கார்ட்டூன் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு பிசாசு எனக்குள் வருவதை நான் பார்த்தேன். எனது தாயார் ஜெபிக்கிறவர்கள் என்பதால் உடனே ஜெபித்து தண்ணீரைக் குடிக்க கொடுத்தார்கள். உடனே அந்த ஆவி என்னிலிருந்து வெளியேறிப் போவதையும் நான் பார்த்தேன். ஆனாலும் நான் கார்ட்டூன் பார்ப்பதை விட வில்லை. அந்த பிசாசின் ஆவி திரும்பவும் எனக்குள் வந்ததும், அம்மா ஜெபித்து தண்ணீரை குடிக்க கொடுத்துவிட்டு, "நீ இதை தொடர்ந்து பார்த்தால் அது உனக்குள் தான் இருக்கும், நீ பார்க் காமல் இருந்தால் தான் அது வெளியே போகும்" என்று சொன் னார்கள். அப்பொழுது நான் ஆண்டவரிடம், இனி நான் கார்ட்டூன் பார்க்க மாட்டேன் என்று என்னை ஒப்புக் கொடுத்துவிட்டு தண்ணீரை குடித்தேன். அப்பொழுதே அந்த ஆவி வெளியேறியது.

### சிறுவயதில் வந்த ஆபத்துகளுக்கு விலக்கி கர்த்தர் விடுவித் தார்... சரி, தேவனுக்கு உங்களை எப்பொழுது ஒப்புக் கொடுத்தீர்கள்?

நாங்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் என்பதால் அப்பா சபைக்கு போகக்கூடாது என்று சொல்வார்கள், அம்மாவை சபைக்கு செல்ல வும் அனுமதிக்க மாட்டார்கள். ஆனால், அம்மா என்னையும் என் அக்காவையும் சபைக்கு அனுப்பி வைப்பார்கள். நாங்கள் சபைக்கு போனது அப்பாவிற்கு தெரிந்தால் அதிகமான அடி கிடைக்கும். அடியை வாங்கிக் கொண்டு ஒவ்வொரு வாரமும் அம்மா எங் களை அனுப்பி வைப்பார்கள். என்னதான் நான் சபைக்கு சென் றாலும், அப்பாவுடன் கோவிலுக்கும் செல்வேன். நான் கோவிலுக்கு சென்றாலும், என்னால் ஜெபிக்காமல் இருக்க முடியாது. ஜெபிக் காமல் இருந்தால் ஏதோ பலனை இழந்ததைப் போல் உணர்வேன். ஒருமுறை தொடர்ந்து இரண்டு நாட்கள் நான் ஜெபிக்க தவறி, கர்த்தர் என்னை உணர்த்தும் போது, நாளைக்கு ஜெபிக்கிறேன் என்று சாக்குபோக்கு சொல்வேன். ஜெபிக்கவில்லை என்றால் வேறொரு ஆவி என்னை ஆளுகை செய்வதை என்னால் உணர முடியும். அப்பொழுது அதிகமாக கோபப்படு வேன், யாருக்கும் கீழ்ப்படியமாட்டேன். என்னோடு ஏதோ ஒரு ஆவி போராடுகிறது என்பதை அறிந்த அம்மா எனக்காக கண்ணீரோடு ஜெபித்தார்கள். அந்த ஆவி என்னை விட்டு வெளியேறியது. அன்று இரவு நானும் அழுது ஆண்டவருக்கு என்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தேன்.

### ஓகே... இரட்சிக்கப்பட்டீர்கள்... அதன் பிறகு உங்களுடைய வாழ்வில் வந்த மாற்றங்கள் என்ன?

இரட்சிக்கப்பட்டவுடன் என்னுடன் படிப்பவர்களுக்கு இயேசுவை குறித்து சொல்ல ஆரம்பித்தேன். பரலோகம் மற்றும் நரகம் என்ற ஒரு புக்கை ஜெராக்ஸ் எடுத்து சிலருக்கு கொடுக்க ஆரம்பித் தேன். வகுப்பில் free hourல் கொஞ்சம் பேர் சேர்ந்து சில ஆவிக்குரிய புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தோம். அவர்களுக்கு வரும் சந்தேகங்களை விளக்கிச் சொல்வேன். அதோடு சேர்ந்து கிறிஸ்துவின் வருகையும் முத்திரை 666 பற்றியும் சொல்வேன். நான் 12வது வகுப்பில் எங்கள் ஊரில் முதலாவது மதிப்பெண் (1096/1200) வாங்க கர்த்தர் கிருபை செய்தார். தினமும் அதிகாலை எழும்பி ஜெபிக்க பெலன் கொடுத்தார். எழும்ப முடியவில்லை என்றால் என் பெயரை சொல்லி கூப்பிடுகிற சத்தம் எனக்கு கேட்கும், உடனே எழுந்து ஜெபிக்க செல்வேன்.


அபிநயா பெற்றோர் மற்றும் சகோதரி நர்மதாவுடன்


அபிநயா



## ஓகே... சுவிசேஷம் சொல்ல ஆரம்பித்தீர்கள்... கர்த்தர் எப்படி உங்களை பயன்படுத்துகிறார்?

எழுப்புதலை பரவச் செய்வோர் முகாமில் கலந்து கொண்ட பின்பு கர்த்தர் என்னை இன்னும் அதிகமாக பயன்படுத்த ஆரம்பித்தார். எங்கள் வீட்டு பக்கத்தில் உள்ள ஒரு சித்திக்கு மூட்டு பகுதியில் கட்டி இருந்ததால் அதை ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னதாக என்னிடம் வந்து சொன்னார்கள். உடனே அவர்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்லி ஜெபித்து, ஜெப எண்ணெய் கொடுத்து அனுப்பினேன். ஒரு வாரத்திற்கு பின்பு அந்த கட்டி மறைந்தது என்று அவர்களே வந்து சொன்னார்கள். இப்பொழுது அவர்களும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஜெபித்து வருகிறார்கள். சிலர் எங்கள் வீட்டிற்கு ஜெபிக்க வரும்போது, நானும் அவர்களுக்காக ஜெபித்து அனுப்புவேன். "**நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்**" என்ற வசனத்தின் படி மகிமையும் காணச் செய்து வருகிறார்.

## முகாமில் கலந்து கொண்ட பின்பு உங்களுக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவு எப்படி இருக்கிறது?

மாதத்திற்கு இரண்டு முறையாவது கிராமங்களுக்கு சென்று சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் கிருபை செய்து வருகிறார். அந்த கிராமங்களுக்கு போகும் முன்பாக, அந்த கிராமத்திற்காக ஜெபிப்போம். நாங்கள் அந்த கிராமத்திற்கு செல்லும்போது வந்திருக்கிற மக்கள் சிலர் அவர்களுடைய பிரச்சனையை வெளிப்படையாக சொல்லுவார்கள். அவர்களுக்காக ஜெபிக்கவும், உதவி செய்யவும் கர்த்தர் கிருபை செய்து வருகிறார். அதுமட்டுமல்லாமல் ஒருநாள் ஒரு வாலிபர் கூடுகைக்கு சென்றபோது, ஆராதனை நேரத்திலிருந்து ஒரு சகோதரியைப் பற்றி எனக்கு தரிசனத்தின் மூலம் வெளிப்படுத்தி, அந்த சகோதரியின் ஒரு அடையாளத்தை காண்பித்து, ஒரு வசனத்தை தந்தார். அந்த வசனத்தின் இருப்பிடம் என் காதில் பயங்கரமாக ஒலித்துக் கொண்டே இருந்தது. கர்த்தர் அந்த வசனத்தை வைத்து அந்த சகோதரியோடு பேச சொன்னார். நான் கர்த்தரிடம் அந்த சகோதரி யார் என்று எனக்குத் தெரியாது, நீங்கள் காண்பித்த அடையாளத்தோடு அந்த சகோதரியைப் பார்த்தால் பேசுகிறேன் என்று சொன்னேன். அந்த சகோதரியை அந்த அடையாளத்தோடு கர்த்தர் காண்பித்தார். தேவன் சொல்ல சொன்னதை அவர்களோடு சொன்னேன். சில சமயம் கர்த்தர் சொப்பனத்தின் மூலமாகவும், தரிசனத்தின் மூலமாகவும் சில காரியத்தை வெளிப்படுத்துவார். நான் அவர்களுக்காக ஜெபித்து பின்பு சுவிசேஷத்தை அறிவிப்பேன். சுரண்டை பகுதியில் மாதந்தோறும் நடக்கும் IGNITERS monthly fellowship நடத்த தேவன் கிருபை செய்து வருகிறார். இப்பொழுது எங்களுடைய அப்பாவும் எங்களுடைய சாட்சியைப் பார்த்து தேவனை விசுவாசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.



## வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

"**என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்**" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இந்த எழுப்புதலின் காலத்தில் கர்த்தர் வாலிபர்களாகிய நம்மை நம்புகிறார், அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரவான்களாய் இருந்து, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் ஜெபிக்காமலோ, வேதம் வாசிக்காமலோ இருந்து விடாதீர்கள். கர்த்தரின் உறவில் உறுதியாய் இருங்கள். கர்த்தர் உங்களோடு கூட இருந்து உங்களை நடத்துவார்.



அன்பான வாலிபர்களே! இன்றைக்கு நீங்களும் கூட குடும்பத்தார் நிமித்தம் ஆலயம் செல்ல முடியாமல், சுவிசேஷம் அறிவிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள், அபிநயா தன் தாயாரின் ஜெபத்தினால் எப்படி தடைகளை மேற்கொண்டார்களோ, அதைபோல் நீங்களும் ஜெபியுங்கள்! நீங்களும் தடைகளை வென்று, இயேசுவின் அன்பை மற்றவர்களுக்கும், உங்கள் குடும்பத்தாருக்கும் சொல்கிறவர்களாக மாற தேவன் உதவி செய்வார். ■



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களின் அர்த்தங்களைக் கொண்டு, அதற்கு சொந்தக்காரர்கள் யார் என்பதைக் கண்டறிந்து, விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

## வினாக்கள்

1. "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்று சொல்லி பெயரிடப்பட்டவன் யார்?
2. "நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன்" என்று சொல்லி பெயரிடப்பட்டவன் யார்?
3. "இவளை ஜாதிகளுக்குத் தாயாகவும், இவளாலே ஜாதிகளில் ராஜாக்கள் உண்டாகவும், இவளை ஆசீர்வதிப்பேன்" என்று சொல்லி தேவன் இவளது பேரை எவ்வாறு மாற்றினார்?
4. "சிவப்பான கூழிலே நான் சாப்பிட கொஞ்சம் தா" என்று கேட்டதால் ஏசாவிற்கு என்ன பேர் உண்டாயிற்று?
5. "அவனை ஜலத்தினின்று எடுத்தேன்" என்று சொல்லி, அந்தப் பிள்ளைக்கு என்ன பேரிட்டார்கள்?
6. "நான் அந்நிய தேசத்தில் பரதேசியாயிருக்கிறேன்" என்று சொல்லி பேரிடப்பட்டவன்?
7. "தன் பலிபீடத்தைக் தகர்த்ததினிமித்தம் பாகால் அவனோடே வழக்காடட்டும்" என்று சொல்லி, யோவாசின் குமாரனுக்கு என்ன பேரிடப்பட்டது?
8. "சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பை கட்டளையிட்டார்", எனவே என்னை இவ்வாறு சொல்லுங்கள் ஒரு ஸ்திரீ கூறினாள்?
9. சிவந்த நிறமுள்ளவனாயும் சர்வாங்கமும் ரோம அங்கிப் போர்த்தவன் போலவும் வெளிப்பட்டதின் நிமித்தம் அந்த பிள்ளைக்கு என்ன பேரிடப்பட்டது?
10. தன் கையினாலே தன் சகோதரனின் குதிங்காலை பிடித்துக் கொண்டு வெளிப்பட்டதால் அந்த பிள்ளைக்கு என்ன பேரிடப்பட்டது?

**கடந்த மாத வெற்றியாளர்**
**சுமி, விருதுநகர்**
**அவர்களை வாழ்த்துகிறோம்.**

### கடந்த மாத விடைகள்

**இடமிருந்து வலம்**

1. நீதிமான் (நீதி. 15:6,19)
5. பேதையர் (நீதி. 14:15,18)
7. மூடர் (நீதி. 14:9,24)
8. நல்லவன் (நீதி. 12:2, 13:22)
9. துன்மார்க்கர் (நீதி. 15:26,29)

**மேலிருந்து கீழ்**

2. துன்மார்க்கர் (நீதி. 15:8,9)
3. விவேகி (நீதி. 14:15,18)
4. முற்கோபி (நீதி. 14:17,29)
6. ஞானி (நீதி. 15:2,7)
10. நீதிமான் (நீதி. 21:15,26)

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள்

**15.02.2022**

**Jesus Redeems Youth Ministries**
Nalumavadi,
Thoothukudi Dist - 628 211
Cell: 97509 55547
Tell : 04639 - 353535
Email: youth@jesusredeems.org

Heart Beat

ஆலோசனை: அவி



நான் பெங்களூரில் உள்ள கல்லூரியில் Aeronautical Engineering 3rd year படித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு சிறந்த பைலட்-ஆக வேண்டும் என்ற கனவு எனக்கு இருந்தது. எனக்கு சொந்த ஊர் சென்னை என்பதால் வார இறுதி நாட்களில் சென்னைக்கு பெற்றோரிடம் வந்து விடுவேன். நான் அடிக்கடி ரயிலில் பயணம் செய்வதால் என்னோடு பயணம் செய்யும் நண்பரோடு நட்பு ஏற்பட்டு, பின்னர் காதலாக மாறி விட்டது. எனக்கு இன்னும் ஒரு வருடம் படிப்பு இருக்கிறது. என்னுடைய வீட்டில் திருமணத்திற்கான பேச்சு ஆரம்பித்ததால் என்னுடைய மனதில் உள்ள விருப்பத்தை சொன்னேன். நான் நேசிக்கும் நபர் போதுமான படிப்பும், நிரந்தர வேலையும் இல்லை என்ற காரணத்தினால் என் பெற்றோர் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. நாங்கள் கடந்த ஒரு வருடமாக பேசி பழகியதால் என்னால் அவரை மறக்க முடியவில்லை. இதனால் வீட்டில் பெரிய குழப்பமும், பிரச்சனையுமாக இருக்கிறது. அவனை விட்டு விடு என்று பெற்றோர் சொல்கிறார்கள். மறுபக்கம் நான் நேசிக்கும் நபர் Register Marriage செய்யலாம், இல்லையென்றால் உயிரை விட்டு விடுவேன் என்று பயமுறுத்துகிறார். ஆனால் என்னால் அவரை மறக்க முடியவில்லை. என் மனதுக்கு பிடித்தவர் வேண்டும் என்பதே எனது விருப்பம். என் படிப்பு, பெற்றோரைவிட அவரை அதிகமாக நான் நேசிக்க ஆரம்பித்து விட்டேன். ஆனால் நான் செய்வது சரியா? தவறா? என்று எனக்கே குழப்பமாக இருக்கிறது

- ரெஜினா, சென்னை

*அன்பு சகோதரி ரெஜினா!*

உங்கள் கடிதத்தின் மூலம் உங்களுடைய பிரச்சனையை அறிந்துக் கொண்டேன். நீங்கள் செய்வது சரியா? தவறா? என்று நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

நீங்கள் எடுக்கும் சரியான தீர்மானம், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சிறந்து விளங்க உதவி செய்யும். நீங்கள் எடுக்கும் தவறான தீர்மானம் உங்கள் வாழ்க்கையில் பெரிய ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, நீங்காத காயத்தை உங்களுக்கு நினைவு பரிசாக வழங்கும்.

ரெஜினா! நீங்கள் சொன்னது போல, நீங்கள் அதிகமான குழப்பத்தில் இருக்கிறீர்கள். எனவே குழப்பமாக இருக்கும் போது எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்கக் கூடாது. அப்படி குழப்பத்தில் எடுக்கும் தீர்மானங்கள் பெரும்பாலும் தவறான முடிவாகவே இருக்கும்.

ரெஜினா! சற்று பொறுமையாய் ஒரு சில காரியங்களை நீங்கள் நிதானித்து யோசிக்கும் போது, குழப்பம் நீங்கி சரியான முடிவை எடுக்க முடியும். எனவே சில கேள்விகளை நீங்களே உங்களுக்கு கேட்டுக் கொள்ளும் போது பதில் கிடைக்கும் என்பதில் சந்தேகமல்லை.

## உங்களுக்கான ஒருசில கேள்விகள்

- **? நீங்கள் Aeronautical படிப்பைத் தெரிந்தெடுப்பதற்கான காரணம் என்ன?**
- **? அந்தப் படிப்பில் நீங்கள் அடைய நினைத்த பதவி என்ன?**
- **? உங்களை உங்கள் பெற்றோர் உண்மையாகவே நேசிக்கிறார்களா?**
- **? இப்பொழுது ஏற்பட்டுள்ள உறவு, எப்படிப்பட்ட விளைவுகளை உண்டாக்கும்?**
- **? எந்த தீர்மானம் - சந்தோஷமான திருமணத்தில் முடியும்?**
- **? ஒருவேளை நேசித்தவரை திருமணம் செய்தால் என்ன விளைவுகள் ஏற்படும்?**

- நேசித்தவரை Register Marriage செய்தோம் என்ற சந்தோஷம் ஒருசில நாட்கள் இருக்கலாம்.
- உங்களுடைய திருமணம், விமரிசையாய் இல்லாமல் விமர்சனமாகப் பேசும் நிலை வரும்.
- உங்கள் பெற்றோர் கண்ணீரிலும், பிரிவிலும், வேதனையிலும், அவமானத்திலும் முழ்கக்கூடும்.
- படிக்கிற காலத்தில் இப்படி செய்து விட்டாயே என்று சமுதாயத்தில் அவப்பெயரை உண்டாக்கி அவமானத்தை ஏற்படுத்தும்.
- உங்கள் நிமித்தம் உங்கள் குடும்பமே சிதைந்து போகும் நிலை ஏற்படலாம்.
- கல்லூரியில் எல்லோருக்கும் உங்களைக் குறித்து தவறான எண்ணம் உண்டாகி, தவறான Role Modelஆக நீங்கள் மாறக்கூடும்.
- உங்கள் காதலனுக்கு சரியான வேலையில்லாததால் உங்கள் குடும்ப வாழ்க்கையில், அன்றாட தேவைகள் போன்ற பல கஷ்டங்களையும், பிரச்சனைகளையும் நீங்கள் சந்திக்க நேரிடும்.
- கல்லூரிப் படிப்பு பாதியில் நின்றதால், ஒரு கௌரவமான வேலையோ, உயர்ந்த பதவியோ உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை. எனவே ஒரு சாதாரண வேலைக்கு சென்று, நடுத்தர வாழ்க்கைதான் வாழ முடியும்.
- பெற்றோரை தலைகுனிய வைத்து விட்டோமே என்ற வேதனை நீங்காத காயமாக உங்கள் உள்ளத்தில் இருக்கும்.
- இன்னும் பல வேதனைகளையும், சவாலான காரியங்களையும் சந்திக்க வாய்ப்பு உண்டு.
- மேலும் நீங்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் இருப்பதால் இயேசுவின் நாமத்துக்கு அவமானமும், சபையில் உங்களது நற்சாட்சி கெட்டுபோவதற்கு அதிக வாய்ப்பு உண்டு.



**ஒருவேளை அந்த நபருக்கு No சொல்லிவிட்டு பெற்றோரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால்...**

- நேசித்தவரை பிரிந்து விட்டோம் என்ற வேதனையும், கண்ணீரும் சில மாதம் நீடிக்கலாம்.
- அவரோடு பேசின வார்த்தைகள், பல சூழ்நிலைகள் உங்கள் நினைவில் வந்து வந்து உங்களை வேதனைப்படுத்தி, அந்த காயம் ஆற சில நாட்கள் ஆகலாம்.
- ஆனால் உங்களின் படிப்பை சிறந்த முறையில் படித்து முடித்து, நல்ல ஒரு கம்பெனியில் Placeஆகி ஒரு சிறந்த சாதனையாளராக வலம் வரலாம்.
- உங்கள் கல்லூரிக்கும், குடும்பத்துக்கும் பெருமை சேர்க்கலாம்.
- உங்களின் Achievement மூலம் சபைக்கும், சமுதாயத்திற்கும் நீங்கள் நற்சாட்சியாய் மாறலாம்.
- பெற்றோரின் ஆசீர்வாதத்தோடு, ஒரு குடும்பத்தில் நல்ல திருமணம் முடித்து, நல்ல வாழ்க்கையை வாழலாம். உங்களுடைய எதிர்காலம் பிரகாசமாக மாறும்.
- உங்கள் திருமணத்திற்கு பிறகும் எல்லாருக்கும் முன்னால் சாட்சியாக, தேவனுக்காக பல ஊழியத்தை செய்யலாம்.

*இப்படி பல நல்ல நிகழ்வுகள் உங்கள் வாழ்க்கையில் நடக்க வாய்ப்பு உண்டு.*

**"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்"** (எபே. 6:1).

ரெஜினா! நீங்கள் ஜெபிக்கிற தங்கை என்பதால் யோசித்து, ஜெபித்து முடிவு எடுங்கள். இயேசப்பா உங்களை அதிகம் நேசிப்பதால், கட்டாயம் இந்த கண்ணியில் இருந்து வெளியே வந்து, சிறகடித்து பறக்க இயேசு உதவி செய்வார். இனித் தீங்கைக் காணாதிருப்பாய் என்ற வாக்குத்தத்தத்தின்படி இயேசப்பா உங்களை காப்பாராக! ■

வேத ஆராய்ச்சி: ரேச்சல்

# நாகூம்

## (நினிவேயின் அழிவு)

அன்பான இளம் நெஞ்சங்களே! ஒவ்வொரு மாதமும் புதுப்புது காரியங்களைத் தெரிந்துக் கொள்ளுகிறீர்கள் என நம்பு கிறோம். இந்த மாதமும் சிறிய தீர்க்க தரிசன நூல்களில் ஏழாவது புத்தகமான 'நாகூம்' பற்றிய சுவாரஸ்யமான தகவல் களை சுருக்கமாகக் காணலாம்.

| | |
|---|---|
| ஆசிரியர் | : **நாகூம்** |
| கால | : **கி.மு. 663 - 612** |
| அதிகாரங்கள் | : **3** |
| வசனங்கள் | : **43** |
| வார்த்தைகள் | : **1,285** |
| முக்கிய நபர்கள் | : **நாகூம்** |

### சிறப்பம்சங்கள்

✪ அந்நிய தேசத்திற்கென்று கொடுக்கப் பட்ட செய்தி அடங்கியுள்ள பழைய ஏற் பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களில் இந்த நாகூமும் ஒன்று. மற்ற இரண்டு புத்தகங்கள் ஒபதியா, யோனா என்பது குறிப்பிடத்தக்கது.

✪ யூதாவின் பாவங்களைக் குறித்தோ அல்லது அதன் விக்கிரக ஆராதனை யைக் குறித்தோ எந்த தீர்க்கதரிசன செய்தியும் இந்த புத்தகத்தில் இல்லை என்பது நன்கு அறியப்படுகிறது. ஏனென் றால், இது யோசியா இராஜாவின் சீர்தி ருத்த காலங்களில் எழுதப்பட்டது (2 இராஜா. 22:8, 23:5). யூதாவுக்கு ஆறுத லையும், நம்பிக்கையையும் அளிக்கும் வார்த்தைகள் சில இதில் உண்டு (1:12,13,15).

### நாகூம் - சுருக்கம்

- நினிவேயின் மேல் தேவனின் நியாயத்தீர்ப்பும், தீர்க்க தரிசனமும் (1)
- நினிவேக்கு எதிரான தேவனுடைய கோபம் (1:2-8 வசனங்கள்)
- தேவனுக்கு எதிரான நினிவேயின் சூழ்ச்சியை முடிவுக்கு கொண்டு வருதல் (1:9-11)
- நினிவேயின் நியாயத்தீர்ப்பின் காரண மாக யூதாவுக்கு ஆறுதல் (1:12-15)
- நினிவேயின்மேல் வருகின்ற தேவனு டைய நியாயத்தீர்ப்பை விளக்குதல் (2)
- தாக்குதல் - விளக்கம் (2:1-6)
- முறியடிப்பு - அறிவித்தல் (2:7-13)
- நினிவேமேல் வருகின்ற தேவனின் நியாயத்தீர்ப்புக்கான காரணம் (3)
- அதன் வன்முறையும், ஏமாற்றுதலும் வெட்கத்தை கொண்டு வருகிறது (3:1-7)
- நோ அம்மோன் பட்டணத்திற்கு செய்தது அதற்கே வெட்கத்தை உண்டாக்குகிறது (3:8-11 வசனங்கள்)
- பட்டணத்தின் பாதுகாப்பினால் பயனில்லை (3:12-19 வசனங்கள்)

### நாகூமில் கிறிஸ்து

நேரடியான 'மேசியா-தீர்க்கதரிசனம்' இந்த புத்தகத்தில் இல்லாத போதும், எல்லா தீர்க்கதரிசன ஆவியின் அடிப்படையில், இந்த புத்தகத்தில் கிறிஸ்து எதிரிகளை பழிவாங்குகிற ஒரு வைராக்கியமுள்ள தேவனாக காணப்படுகிறார் (1:12,13). ■

முகப்பு செய்தி: சதீஷ்

# தேவ அன்பு



**நாம் வாழும் உலகில் அன்பு, பாசம், நேசம் இவையெல்லாம் ஒரு கானல் நீரைப் போல காணாமல் போய் விடுகிறது. மனிதனுடைய அன்பு நிமிடத்திற்கு ஒருமுறை மாறிக் கொண்டே இருக்கிறது.**

**"நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாது" என்று சொல்லும் அதே வாய்தான், "நீ என்னோடு இருந்தால் வாழ முடியாது" என்று சொல்லும். இப்படி மனிதனுடைய அன்பு இன்றைய கால கட்டத்தில் மாறிக் கொண்டே இருக்கிறது. அறிவியல் வளர்ச்சி மனிதனை ஆகாயம் வரைக்கும் உயர்த்தினாலும் தாயும், தந்தையும் பிள்ளைகளின் மீது வைக்கும் அன்பு என்றும் மாறாமல் உள்ளது.**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பிடித்தமான செல்போன், லேப்டாப், டேப் போன்றவற்றை வாங்கிக் கொடுத்து தங்களுடைய அன்பை வெளிப்படுத்தினாலும், அநேக இளம் வாலிபர்கள் பெற்றோர்களின் அன்பை புரிந்து கொள்வதில்லை. பெற்றோர்களின் ஆலோசனையும், அறிவுரையும் தங்களை அடிமைப்படுத்துவதாகவே வாலிபர்கள் நினைக்கின்றனர். எந்த பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளை அடிமையாக நினைப்பதும் இல்லை, அடிமையாக நடத்துவதும் இல்லை என்பது தான் உண்மை. இப்படி பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே இருக்கும் அன்பில் பிளவு ஏற்படும் போது, படிக்கும் இடத்தில் அல்லது வேலை செய்யும் இடத்தில் யாராவது ஒருவர் அன்பாய் பேசும் போதோ அல்லது பழகும் போதோ அது ஆறுதலாய் மாறி காதலாகி விடுகிறது. இன்றைய தலைமுறைக்கு காதல் என்பது என்னவென்று தெரியவில்லை.

தேவன் நமக்கு கொடுத்திருக்கும் அன்பு என்ற சுபாவமும், பாலுணர்வு என்ற சுபாவமும் கலந்து எதிர்பாலர் மீது உண்டாகும் ஈர்ப்பே காதல் என்று நம் தமிழ் சமுதாயத்தில் சொல்லப்படுகிறது. உலகத்தின் பார்வையில் இது சரியாக இருப்பதால் இன்று பள்ளிப் பருவத்தில் படிக்கும் அநேக மாணவர்கள் காதலில் விழுந்து (Fallen in Love) தங்களின் எதிர்காலத்தையும் படிப்பையும் தொலைத்து விடுகிறார்கள். தமிழகத்தில் 15% மாணவர்களின் தற்கொலைக்கு காரணம், இந்த காதல் தோல்வித்தான் என்று உங்களுக்கு தெரியுமா? பெற்றோர்களின் உண்மையான அன்பை மறந்து, மாய்மாலமான அன்பைத் தேடி தங்கள் வாழ்க்கையை தொலைத்த அநேகர் நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பெற்றோர்கள் உங்கள் மீது வைக்கும் அன்பு எந்த சூழ்நிலையிலும் மாறாது. தன் நண்பர்களுடன் சேர்ந்து தகப்பனுடைய ஆஸ்தி எல்லாவற்றையும் அழித்து, புத்தி தெளிந்து தன் தகப்பனிடத்தில் சென்ற கெட்ட குமாரனுக்கு உயர்ந்த


**பெற்றோர்களின் உண்மையான அன்பை மறந்து, மாய்மாலமான அன்பைத் தேடி தங்கள் வாழ்க்கையை தொலைத்த அநேகர் நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்**



வஸ்திரத்தையும், மோதிரத்தையும், பாதரட்சையும் கொடுத்து தன் அன்பை வெளிப்படுத்திய அந்த தகப்பனுடைய அன்பிற்கு நிகர் எதுவும் இல்லை. பெற்றோர்கள் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லா படகில் செய்யும் பயணம் போன்றது.

இன்றைக்கு கிறிஸ்தவ வாலிபர்களுக்கு இருக்கும் கேள்வியும் சவாலும் என்னவென்றால், புறஜாதி வாலிபர்களை காதலிப்பது தவறு, ஆனால் ஆலயத்தில் அல்லது Fellowship-ல் இருப்பவரை காதலிப்பது சரிதானே என்று விழுந்தவர்களும் உண்டு, விழதூண்டப்படுபவர்களும் உண்டு. ஒருவேளை உங்களுக்குகூட இப்படிப்பட்ட ஒரு கேள்வி இருக்கலாம். நம்முடைய வேதம் சொல்கிறது, **"...பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக"** (யாத். 20:17). நீங்கள் திருமணம் செய்யும் வரை யாருக்கும் யார் சொந்தமில்லை. எனவே உங்களுக்கு சொந்தமில்லாத ஒருவரை சிநேகிப்பது இச்சையே. எனவே உங்களுடைய வாழ்க்கையில் சுய இச்சைக்கு இடம் கொடுக்காமல், தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். கிறிஸ்துவின் பார்வையில் திருமணத்திற்கு முன்பு வரும் காதல் தவறு.

**நீங்கள் அவர் மீது வைத்த அன்பினால் அவர் இந்தப் பூமிக்கு வரவில்லை. மாறாக, இயேசு உங்கள் மீது அன்பு வைத்ததால்தான் அவர் உங்களைத் தேடி வந்து தன்னுடைய அன்பை வெளிப்படுத்தினார்.**




ஆதாம் ஏவாள் இருவரும் தங்களை உண்டாக்கின தேவனுடைய அன்பை மறந்து பாவம் செய்த போதும், அவர்கள் நிர்வாணியாய் இருப்பதைக் கண்ட ஆண்டவர், **"...தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்"** (ஆதி. 3:21). இதன்மூலம் தேவனுடைய அன்பு வெளிப்படுகிறது. இந்த உலகத்தில் மனிதர்கள் நம்மீது வைக்கும் அன்பு குறைவுபடலாம். ஆனால் தேவன் நம்மீது வைக்கும் அன்பு என்றும் குறைவுபடாது. அவர் நம்மீது அன்பு வைத்ததினால்தான், **"தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது"** (1 யோவான் 4:9). பிதாவாகிய தேவன் நம்மீது எவ்வளவு அன்பு வைத்து இருக்கிறார் என்பதை இதன்மூலம் அறிய முடிகிறது. எனவே இந்த உலகத்தில் இருக்கும் வரை நீங்கள் இந்த உலகத்தை சிநேகிக்காமல் உங்களுக்காகவே இவ்வுலகத்திற்கு வந்த இயேசு கிறிஸ்துவை சிநேகியுங்கள், அவரில் நிலைத்திருப்பீர்கள்.

எனக்கன்பான வாலிபர்களே! இந்த உலகத்தில் மனிதர்கள் உங்கள் மீது வைக்கும் அன்பு கானல் நீரைப் போல சில நொடிகளில் காணாமல் போய் விடலாம். ஆனால் பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் உங்கள் மீது வைத்த அன்பு எந்த சூழ்நிலையிலும் மாறாது. நீங்கள் அவர் மீது வைத்த அன்பினால் அவர் இந்தப் பூமிக்கு வரவில்லை. மாறாக, இயேசு உங்கள் மீது அன்பு வைத்ததால்தான் அவர் உங்களைத் தேடி வந்து தன்னுடைய அன்பை வெளிப்படுத்தினார். உங்களைத் தேடி வந்தவரின் அன்பை புரிந்து கொள்ளாமல், நிலையற்றதும் மாய்மாலமான அன்பைத் தேடி அலையும் உலகத்தார் போல் இல்லாமல் தேவனுடைய அன்பை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், **"...தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்"** (1 யோவான் 4:16). ■

செய்தி: மோகன் சி.லாசரஸ்

# நேசரின் விருப்பம்...



“என் நேசர் என்னுடையவர், நான் அவருடையவள்...” (உன். 2:16). மணவாளனாகிய இயேசுவுக்கும், மணவாட்டியாக நமக்கும் இருக்கிற உறவைப் பற்றி தான் உன்னதபாட்டில் எழுதப்பட்டிருக்கிறது. அவர் மணவாளன், சபை மண வாட்டி. ஒரு கூட்டமாக இருக்கிற சபை மாத்திரமல்ல, ஒரு தனிப்பட்ட விசுவாசியும் மணவாட்டி. தனிப்பட்ட ஒரு விசுவாசிக்கும், மணவாளனாகிய இயேசுவுக்கும் உள்ள உறவு, அவர்களுக்குள் காணப்படுகிற ஐக்கியத்தைப் பற்றி தான் இந்த புத்தகம் ஆழமாய் பேசுகிறது.

ஆமோஸ் 3:3ல், இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தால் ஒழிய எப்படி சேர்ந்து நடந்து போவார்கள்? மணவாளனாகிய இயேசுவும், மணவாட்டியாயிருக்கிற நாமும் இணைந்து ஒருமனப்பட்டு நடந்தால் தான், அந்த ஐக்கியம் பலமுள்ள தாக இருக்கும். என் இயேசு மணவாளன், என்னிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார்? என்ன விரும்புகிறார்? என்பதை உணரும் போது, நாம் விரும்புகிறதை மணவாளனாகிய இயேசு நிறைவேற்றுவார்.

உதாரணமாக, நான் படிக்க வேண்டுமென்று விரும்பி ஜெபம் செய்த போது, கர்த்தர் எனக்கு உதவி செய்தார் என்று படிக்கிற பிள்ளைகள் சொல்வார்கள். எனக்கு இந்த வேலை கிடைக்க வேண்டுமென்று விரும்பி ஜெபம் செய்த போது, கர்த்தர் என் விருப்பத்தை நிறைவேற்றினார். எனக்கு வீடு வேண்டுமென்று விரும்பி ஜெபம் செய்த போது, கர்த்தர் எனக்கு தந்தார். நீங்கள் விரும்புகிறதை எல்லாம் மண வாளனாகிய இயேசு நிறைவேற்றி தருகிறார். நம்முடைய விருப்பத்தை அறிந்து அதை நிறைவேற்றிக் கொடுக்கிற, நம்மை சந்தோஷப்படுத்துகிற மணவாளனாகிய இயேசு கிறிஸ்து நமக்கு இருக்கிறார். பரலோகத்தில் என்னோடுகூட வாழ்ந்திருக்க போகிற மணவாட்டிகள், இந்த பூமியில் இருக்கும் போதும், அவர்கள் விரும்புகிறதை நான் செய்து கொடுத்து சந்தோஷப்படுத்த வேண்டும் என்று கர்த்தர் நம்மை எல்லாவிதத்திலும் சந்தோஷப்படுத்துகிறார்.

மணவாட்டியாக அவர் நேசித்து உங்களை பிரியப்படுத்த, உங்களது விருப்பத்தை நிறைவேற்ற அவ்வளவு வாஞ்சையுள்ளவராக இருக்கிறார். ஆனால், மணவாட்டியாகிய நாம் மணவாளனாகிய இயேசுவின் விருப்பத்தை நிறைவேற்றுகிறோமா? நாம் அவருடைய விருப்பத்தை நிறைவேற்று கிறவர்களாக இருந்தால், அவருக்கு நம்மேல் அன்பு, பாசம் அதிகமாகும். எனவே நாம் அவரு டைய விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.



கர்த்தர் நம்மை சீஷர்களாக மாற்றி, பிள்ளை களாக மாற்றி, சிநேகிதர்களாக மாற்றினார். சிநேகிதன் என்கிற உறவும் நெருக்கமான உறவு தான். ஆனால் அதையும் தாண்டி மணவாளன், மணவாட்டி என்கிற உறவை கொடுத்திருக்கிறார். ஏனென்றால், அவர் மண வாளனாக தான் வரப் போகிறார். நாம் மண வாட்டியாக அவரை சந்திக்க போகிறோம் என்று வேதம் சொல்கிறது. அதுதான் ஒரு மேன்மையான நிலமை. தகப்பன் பிள்ளை கள் என்கிற உறவைத் தாண்டி, இப்போது ஒரு மணவாளன் என்கிற உறவுக்குள்ளே வளர்ந்து, ஒரு நெருக்கமான அனுபவத்தில் செல்வது தான் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சி.

## நெருக்கமான அனுபவத்தில் வாழ என்ன செய்ய வேண்டும்?

“பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும் படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்” (யோவான் 17:24). தன் சீஷர்களுக்காக, தான் தெரிந்து கொண்டவர் களுக்காக பிதாவிடம் இயேசு ஜெபம் பண்ணுகிறார். அப்படி



ஜெபம் பண்ணும்போது, "நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்" என்று சொல்கிறார். இன்றைக்கு கர்த்தர் நம்மை பார்த்து, 'நீ என் மணவாட்டி தானே, நான் உன் மணவாளன் தானே, என்னுடைய விருப்பம் என்ன என்று உனக்கு தெரியுமா? "நீ 24 மணி நேரமும் என்கூடவே இருக்க வேண்டும்" என்பதே என்று சொல்கிறார். நாம் 24 மணி நேரமும் மணவாளனோடு இருக்கிறோமா? ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்கு சென்று வரும் வரைக்கும் மிகவும் பக்தியாக கர்த்தரோடு இருப்போம். ஆலயத்தில் இருந்து வந்து வேதப்புத்தகத்தை வைத்த பிறகு, கர்த்தரையே மறந்து விடுவோம். நான் உன்னை விட்டு விலகுவதில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் பள்ளிக்கூடத்திற்கு சென்றாலும், கல்லூரியில் இருந்தாலும், பேருந்தில் பயணம் செய்யும் போதும், சைக்கிளில், பைக்கில் சென்றாலும் எப்பொழுதும் கர்த்தர் உன்னோடு கூட இருப்பார். இது மற்றவர்களுக்கு தெரியாது, ஆனால் என் மணவாளன் பக்கத்தில் இருக்கிறார் என்று ஒரு மணவாட்டிக்கு தெரிய வேண்டும். இதுதான் மணவாளனோடு இருக்கும் நெருக்கமான அனுபவம். இப்படிப்பட்ட நெருக்கமான அனுபவத்திற்கு நாம் வர வேண்டும்.

அரசாங்க அலுவலகத்தில் ஒரு பெரிய பதவியில் பணிபுரியும் ஒரு சகோதரரை எனக்கு தெரியும். அவருடைய ஜெப வாழ்க்கை பற்றியும், அவரது அரசு பணியின் அனுபவங்களைப் பற்றியும் நான் கேட்பேன். அப்பொழுது அவர் சொல்வார், நான் காலையில் தேவ சமூகத்தில் பல நிமிடங்கள் காத்திருந்து கர்த்தரோடு பேசின பிறகு தான் என் ஜெபத்தை முடிப்பேன். ஜெபம் முடித்து, காலை சாப்பாடு சாப்பிட்டுவிட்டு அலுவலகத்திற்கு புறப்படும்போது, ஆண்டவரே நாம் இரண்டு பேரும் போகலாம் என்று சொல்லி தான் கிளம்புவேன். என் அலுவலக அறைக்குள் வந்தவுடனே, எப்போதும் என் நாற்காலிக்கு வலது பக்கம் இன்னொரு நாற்காலியை போட சொல்வேன். நான் என் அறைக்கு சென்றவுடன், "ஆண்டவரே நீர் என் அறைக்கு வந்திருக்கிறதற்காக நன்றி, நாம் இரண்டு பேரும் சேர்ந்து இன்றைக்கு வேலை செய்ய போகிறோம், என்கூட அமர்ந்திரும்" என்று ஜெபிப்பேன். ஆபீசர்ஸ் மற்றும் வேலை செய்கிற ஊழியர்கள் கையெழுத்து வாங்க வருவார்கள். "உங்கள் அறைக்குள் வந்தால் ஒரு வித்தியாசம் தெரிகிறதே" என்று இயேசுவை அறியாத மக்களே சொல்லுவார்களாம். அவர் சிரித்துக் கொண்டே "நானும் இயேசுவும் இங்கு தான் இருக்கிறோம்" என்று மிகவும் பயபக்தியாக சொல்வாராம்.



இயேசு கூட இருந்தால் நீங்கள் தவறு செய்யும் போது, நீ என் பிள்ளையாக இருந்து கொண்டே இப்படி பண்ணலாமா! நீ என்னை உன்னோடு வைத்து கொண்டே லஞ்சம் வாங்குகிறாயா? அநியாய சம்பாத்தியம் வேண்டாம் என்று சொல்லுவார். இயேசுவோடு வாழ்ந்து பாருங்கள், உங்கள் சுபாவங்கள் மாறி வாழ்க்கையே மாறி விடும். ஒரு மணவாட்டி மணவாளனாகிய இயேசுவோடுகூட இருக்க வேண்டும். நீங்கள் வீட்டில் ஜெபம் செய்து விட்டு இயேசுவை வீட்டிலேயே விட்டு போகாதீர்கள்! ஆண்டவரே, நீர் என்கூட வர வேண்டும் என்று அவரோடு உள்ள உறவில் வளர்ந்து விட்டீர்களென்றால், அந்த மணவாளன் மணவாட்டிக்குள் இருக்கிற ஐக்கியம், எவ்வளவு பெரிய சந்தோஷம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

அன்பான வாலிபர்களே! இயேசுவில் நிலைத்திருக்க அர்ப்பணித்து அதற்காக தினமும் வேதம் வாசித்து, கர்த்தருடைய பிரசன்னத்தில் நீங்கள் காத்திருந்து ஜெபிக்க வேண்டும். மணவாளனாகிய இயேசுவோடு உள்ள உறவில் மணவாட்டியாகிய நாம் நிலைத்திருந்து வேதம் வாசித்து ஜெபிக்கும் போது, அவருடைய பிரசன்னத்தை உணர முடியும். அப்பொழுது தான் நேசரின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவர்களாக! ■

சாதனை: சுமா



ஒரு சாதனையாளரின் வாழ்க்கை பயணம்...

# 'கை' கொடுத்த 'கை'

Zion Clark செப்டம்பர் 29, 1997 ஆண்டு கொலம்பஸ். ஓஹியோ வில் பிறந்தார். பிறக்கும் போதே Caudal Regression Syndrome என்ற ஒரு அரிய வகை நோயுடன் கால்கள் இல்லாமல் பிறந்தார். இவரைப் பார்த்த இவரது பெற்றோர் தங்களால் Zionயை வளர்க்க முடியாது என்று கருதி காப்பகத்தில் சேர்க்கப்பட்டார். சிறு வயதில் இருந்தே பல போராட்டங் களை சந்தித்தார். ஆனாலும், ஏதா வது ஒன்றை சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

இவர் மல்யுத்தத்தின் மீது ஆர்வம் உள்ளவராய், சிறு வயதில் இருந்தே மல்யுத்த பயிற்சியை மேற்கொண்டு, பல போட்டிகளில் பங்கேற்றார். ஏனோ, தோல்வியை மட்டுமே சந்தித்தார். ஆனாலும், இவர் மனம் தளராமல் தன் முடிவில் உறுதியாக இருந்தார். மீண்டும் கடின பயிற்சிகளை மேற் கொண்டு, மல்யுத்த போட்டிகளில் பங்கேற்றார். 2020ஆம் ஆண்டு மல்யுத்த போட்டி மற்றும் பாரா ஒலிம் பிக்கில் வீல் சேர் போட்டிகளில் பங் கேற்றார். வெற்றியை ருசித்துப் பார்க்க முடியவில்லை என்றாலும் இரு கால் கள் இல்லாமல் இரு ஒலிம்பிக் போட் டியில் பங்கேற்ற நபர் என்ற பாராட் டைப் பெற்றார். இது போதும் என்று ஒரு போதும் அவர் நினைக்காமல், உலகம் பார்க்கும் வகையில் சாதனை படைக்க வேண்டும் என்ற எண்ணம் அவரை தூண்டிக் கொண்டே இருந் தது. இதனால் கைகளினால் ஓடி சாதனை படைக்க வேண்டும் என்று முடிவு செய்து அதற்காக பல கடின பயிற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினார். தொடர்ந்து பயிற் சியை விடாமல் தன்னை தயார் படுத்தினார். வெறும் 4.78 விநாடி களில் 20 மீட்டர் தூரத்தை தன் கைகளால் ஓடி கடந்தார். அநேகர் பார்த்து வியந்தனர். Highest box jump மற்றும் Diamond pushup ஆகிய விளையாட்டுகளில் கின் னஸ் சாதனையைப் படைத்தார். மல்யுத்தம் மற்றும் பல்வேறு விளையாட்டுகளில் மிகுந்த ஆர் வம் கொண்டிருந்த இவருக்கு இசை மீதும் மிகுந்த ஆர்வம் இருந் ததால் அதனை கற்றுக் கொண்டு ஆலயத்தில் இசைக் கருவிகளை வாசிக்க ஆரம்பித்தார். ஒருநாள் பெற்றோரால் வேண்டாம் என்று நினைத்தவர் இன்று உலகமே வியந்து பார்க்கும் வகையில் உயர்ந்து உள்ளார்.









இதை வாசிக்கும் சாதனையாளர் களே, இவர் தன்னுடைய வாழ்க் கையையோ அல்லது தன்னு டைய குறைபாடுகளையோ அவர் குறை சொல்லவில்லை. அதற்கு எதிராக போராட ஆரம்பித்தார். இன்று வெற்றியும் கண்டார். அது சரியில்லை, என் வாழ்க்கையில் இது சரியில்லை என்று சொல் வதை நிறுத்திவிட்டு சாதிக்க வழியை உருவாக்குங்கள். பய ணிக்க வழியே இல்லாத இடத்தில் வழியை உருவாக்க பயணிப்பவர் களே சாதனையாளர்கள். உங்க ளுக்கான பாதையை உருவாக்கி வெற்றி நடை போடுங்கள்! ■

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## பொள்ளாச்சி



கடந்த ஜனவரி 2023, 8ம் தேதி பொள்ளாச்சியில் வைத்து நடத்தப்பட்ட இக்கூடுகையில் சுமார் 600 வாலிபர்களும், சிறுவர்கள் பெரியவர்கள் என 400 பேர் கலந்து கொண்டார்கள். இந்த வருடம் அபிஷேகத்தின் ஆண்டு என்று ஆண்டவர் கொடுத்த வாக்கின்படியே வந்திருந்த அனைவரையும் அபிஷேகத்தால் நிரப்பி எழுப்புதல் அக்கினியைப் பெற்று சென்றனர். சகோதரர் சாம் ஜெபராஜ் அவர்கள் எழுப்புதல் தரிசனத்தைச் சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள். இயேசு விடுவிக்கிறார் குழுவினர் பாடல், ஆராதனை வேளைகளை நடத்தி னார்கள். வந்திருந்த வாலிபர்கள் 15,000க்கும் அதிகமான கைப்பிரதிகளை வாங்கிச் சென்று, சுவிசேஷத்தைத் தீவிரமாய் அறிவிக்க அனுப்பப்பட்டுள்ளனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

# அன்பு

அன்பு என்ற குணம் இருந்தால் எவரையும் கவர்ந்துக் கொள்ளலாம். அன்பாக பேசிப் பழகும்போது, ஒருவருடன் வெகு விரைவில் ஐக்கியமாகி விடலாம். ஆகையால் தான் I கொரி. 13ம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் அன்பைக் குறித்து விவரிக்கிறார்.

**அன்பு பொறுமையானது :** உண்மையான அன்பு வலி துன்பம் கோபம் எதுவாக இருந்தாலும் பொறுத்துக்கொள்ளும்.

**அன்பு கனிவானது :** மென்மையான, அக்கறையுள்ள மற்றும் இரக்கமுள்ள இதயம் உள்ளது. அது உங்கள் துயரத்தை மறந்து, மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

**அன்பு பொறாமை கொள்ளாது :** உண்மையான அன்பு திருப்தியுடன் இருக்கும். மற்றவர்களின் ஆசீர்வாதங்களைப் பார்த்து பொறாமைக் கொள்ளாது.

**அன்பு பெருமை கொள்ளாது :** தன் தவறுகளை ஒப்புக்கொண்டு அவற்றை திருத்தி தாழ்மையுடன் இருக்கும். அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்கு பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது (I கொரிந்தியர் 13:4)

**அன்பு மரியாதைக்குரியது :** உண்மையான அன்பு எல்லோரையும் மதிக்கும். மற்றவர்களை புண்படுத்தாமல் அனைவரும் சந்தோஷிப்பிக்கும்.

**அன்பு தன்னலமற்றது :** உண்மையான அன்பு எப்போதுமே எல்லோரையும் அக்கறையுடன் விசாரிக்கும். பேராசைக்கு கொள்ளாது.

**அன்பு அமைதியானது :** எப்போதும் மனதில் தெளிவையும் இதயத்தில் மென்மையையும் வளர்க்கிறது. கோபத்தை அடக்கி விடும், சந்தேகப்படாது.

**அன்பு நீதியானது :** எப்போதும் சரியானதையேச் செய்யும். தவறுகளைசுட்டிக்காட்டி பகைமைக் கொள்ளாது. மற்றவர்களுக்கு தீங்கு செய்ய நினைக்காது. **அயோக்கியமானத்தைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது** (I கொரி. 13:5)

**அன்பு உண்மையானது :** நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்து மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஒருவருக்குத் தீங்கு வரும்போது, அதில் சந்தோஷப்படாமல் அந்தத் தீங்கிலிருந்து வெளிவர உதவி செய்யும். பொய் பேசாது. **அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்** ( I கொரி 13:6).

பரிசுத்த பவுல் 13ஆம் அதிகாரத்தை முடிக்கும்போது, உங்களிடம் இருக்கும் எல்லா குணங்களைவிட அன்புதான் மிகவும் உன்னதமானது என்று சொல்கிறார். இன்றைக்கு உங்களால் வேறு எதையும் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை, எல்லோரிடமும் அன்பாக பழக முற்படுங்கள். இயேசு அன்பாகவே இருந்தார். அதுபோல எல்லா சூழ்நிலையிலும் அன்பாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். ■

ஆதாரம் : Internet

# கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட்டது...













இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, மும்பை மற்றும் தெலுங்கானாவில் கடந்த டிசம்பர் (2022) மாதம் அந்தந்த பகுதிகளில் உள்ள Ingiters, தெருவோரங்கள், பேருந்து நிலையம், வணிக வளாகங்கள், பூங்காக்கள், கம்பெனிகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்தும், இனிப்புகளை வழங்கியும் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அதுமட்டு மின்றி கிராமப்புறங்களில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி மாலை நேரங்களில் கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சிகள் மூலமாக பரிசு பொருட்கள் வழங்கியும், விதவைகளுக்கு உதவி தொகை அளித்தும் பரமனின் அன்பை அறிவித்தோம். கிறிஸ்துமஸ் நாட்களில் சுமார் 4.25 லட்சம் கைப் பிரதிகள் கொடுத்து புறஜாதி மக்களுக்கு கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!












Marie Light













சிறப்புக் கட்டுரை : கெத்சி கிளார்வின்

# "யோசனையில் பெரியவர்" செங்கடல்

**நம் அனைவருக்கும் பிரச்சனைகள் போராட்டங்கள் உண்டு. சிலர் அதிலிருந்து வெளிவர முடியாமல் முடங்கி விடுவார்கள், வேறுசிலர் பிரச்சனைகளை மேற்கொள்வார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களுக்கு பிரச்சனைகளையும், போராட்டங்களையும் மேற்கொள்ள யோசனையில் பெரிய தேவன் இருக்கிறார். அநேக நேரம் தேவ பிள்ளைகள் அதை மறந்து தங்கள் சுயபெலத்தினாலும், ஞானத்தினாலும் பிரச்சனைகளை சந்திக்க முயல்வார்கள். இந்த 'யோசனையில் பெரியவர்' (எரே.32:19) என்கிற தொடர் மூலம் இஸ்ரவேல் ஜனங்கள் (தன் சொந்த ஜனங்கள்) பிரச்சனைகளில் சிக்கிக் கொள்ளும் போது எப்படியெல்லாம் அவர்களை விடுவித்தார் என்பதை தியானிக்கப் போகிறோம். இம்மாதம் ஒரு சரித்திர நிகழ்வான அதுவரை நடந்திராத அதற்கு பின்பு இதுவரை நடந்திராத இயற்கைக்கு மேற்பட்ட அற்புதத்தைக் குறித்துப் பார்க்கலாம்.**

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்று வனாந்திரத்தின் வழியாய் வந்து கொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. முன்பக்கம் செங்கடல், பின்பக்கம் பார்வோனின் பலத்த சேனை, இருபுறமும் மலைகள் சூழ்ந்திருக்க எங்கும் ஓடி ஒளிய முடியாத நிலையில் சிக்கி செய்வதறியாது திகைத்தனர். அப்பொழுது "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத். 14:14) என்று கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு வந்தது. இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும் எந்த பக்கமும் நகரமுடியாமல் தப்பி செல்ல வழியில்லாமல், மரித்து விடுவோம் என்ற பயத்தில் இருக்கிறீர்களா? உங்களுக்காக கர்த்தர் யுத்தம் பண்ணுவார்! கர்த்தர் நமக்காக யுத்தம் செய்ய நாம் என்ன செய்ய வேண்டும்?

இஸ்ரவேல் ஜனங்கள் என்ன செய்தார்கள்? அற்புதங்களை செய்கிற கர்த்தரை நம்பி, முயற்சி எதுவும் செய்யாமல் சும்மாயிருந்தார்கள். எவ்வளவு எளிதான யோசனையல்லவா? இஸ்ரவேல்களுக்கு மலை போல் காணப்பட்ட பிரச்சனைக்கு தேவன் எளிதான ஆலோசனைக் கொடுத்து அவர்களை விடுவித்தார். எல்லா பிரச்சனைகளுக்கும் இதுதான் தீர்வா? என்றால் இல்லை. ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் போராட்டங்களுக்கும் ஒவ்வொரு யுக்தியை தேவன் கையாளுகிறார். அப்பொழுதுதான் நாம் அவரையே சார்ந்திருப்போம். அதுமட்டுமல்லாமல், கர்த்தர் மோசேயை நோக்கி, உன் கையில் இருக்கிற கோலை நீட்டு என்றார். அதை செங்கடலுக்கு நேராக நீட்டியவுடன் கடல் இரண்டாக பிளந்தது. 'கோல்' அதிகாரத்தைக் குறிக்கிறது. தேவன் கொடுத்த அதிகாரத்தை மோசே பயன்படுத்திய போது வழி திறந்தது.

அன்பான வாலிபர்களே! இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவருக்கும் அதிகாரத்தை தேவன் கொடுத்திருக்கிறார். இயேசுவின் நாமத்தில், அவருடைய வார்த்தையில் இயேசுவின் இரத்தத்தினால் நம் அதிகாரமிருக்கிறது. அதை பயன்படுத்தினால் மட்டுமே, நம் வாழ்க்கையில் காணப்படுகிற தடைகள் மாறும்! காரியங்கள் வாய்க்கும்! ■

வேதாகம தேசம்:
கெத்சி கிளார்வின்

### அறிமுகம்

கப்பர்நகூம், இஸ்ரவேல் தேசத்தில் கலிலேயா கடலின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. இயேசுவின் ஊழியத்திற்கு கப்பர்நகூம் ஒரு மத்திய பகுதியாக இருந்தது. இப்பிரதேசத்தில் மக்கள் தொகை அதிகமாக இருந்தது. பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மீண்டு வந்த யூதர்களால் கப்பர்நகூம் உருவாக்கப்பட்டது. மீன்பிடி மையமாகவும் இப்பகுதி காணப்பட்டது. இயேசு கிறிஸ்து இங்கு அநேக அற்புதங்களை செய்தார் என்று வேதம் கூறுகிறது. இங்குதான் சீமோன், யாக்கோபு, யோவான், அந்திரேயா போன்றவர்களை தன்னை பின்பற்றி வரும்படி இயேசு அழைத்தார். வரிவசூலிக்கும் மத்தேயு கப்பர்நகூமில் தான் இயேசுவை ஏற்றுக் கொண்டு அவரை பின் தொடர்ந்தான். ஒரு முக்கிய இடமாக கப்பர்நகூம் குறிப்பிடப்பட்டாலும், இயேசுவின் போதனைகளை இம்மக்கள் ஏற்றுக் கொள்ளாததால் சாபத்திற்குள்ளாகிறது.

### சிறப்பம்சங்கள்

- கப்பர்நகூம் என்பது "நாகூம் என்பவரின் கிராமம்" என்று அர்த்தப்படுகிறது.
- இயேசு கலிலேயாவிலே பிரசங்கம் செய்த போது இந்தப் பட்டணத்தில் அடிக்கடி சுற்றித் திரிந்தார்.
- இது கலிலேயா கடலின் வட மேற்கிலுள்ள ஒரு பெரிய நகரம்.
- சென்னை ECR (East Coast Road) போன்று அக்காலத்தில் இது கடற்கரை ஓரத்தில் இருந்த ஓர் விசேஷப்பட்டணம்.
- இக்காலத்தில், கலிலேயாக் கடலின் தென் மேற்கு முனையில் உள்ள டெல் ஹம் என்ற இடம்தான் கப்பர்நகூம் என்று அகழ்வாராய்ச்சி அறிக்கையினால் நம்பப்படுகின்றது.

### கப்பர்நகூமில் இயேசு செய்த அற்புதங்கள்

- ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவியுள்ள மனுஷனை சுகமாக்கினார் (மாற்கு 1:23-26).
- சீமோனுடைய மாமியின் ஜுரத்தை நீங்கச் செய்தார் (மாற்கு 1:31).
- படுக்கையிலிருந்த திமிர்வாதக்காரனுடைய பாவத்தை மன்னித்து, அவனை எழுந்து நடக்கச் செய்தார் (மத்தேயு 9:2-7).
- நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சுகப்படுத்தினார் (மத்தேயு 8:5).
- ஜெப ஆலயத்தலைவனாகிய யவீருவின் குமாரத்தியை உயிரோடு எழுப்பினார் (மாற்கு 5:41).
- வரிப்பணம் கொடுக்க மீனின் வாயிலிருந்து வெள்ளிப்பணம் கிடைக்கச் செய்தார் (மத்தேயு 17:27).

### கப்பர்நகூமிற்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம்

இயேசு கிறிஸ்து இப்பட்டணத்தை மையமாக வைத்து அநேக அற்புத அடையாளங்கள் செய்து, சுவிசேஷம் அறிவித்த போதும் கூட அநேகர் சுவிசேஷத்தை அசட்டை செய்தனர். கடைசியாய் இயேசு இப்பட்டணத்தைக் குறித்து, "உங்களுக்கு ஐயோ" என்றார் (மத்தேயு 11:23; லூக்கா 10:15). அவ்விதமாகவே, பூமியதிர்ச்சியினாலே முற்றிலும் அழிந்து, இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது கப்பர்நகூம் என்ற நகரம்.

அன்பு வாலிபர்களே! இயேசுவை நன்கு அறிந்தும் உன் இருதயத்தில் அவருக்கு இடம் கொடுக்க தயங்குகிறாயா? கப்பர்நகூம் மக்களைப் போல நம் தேசமும், நம் தேச மக்களும் அழிந்து விடாதபடிக்கு இன்றைக்கே உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுப்பீர்களா? ■

# கப்பர்நகூம்



# ஜெபக் கையேடு

ஜெபம் : பெனிட்டா



ரஷ்யா உக்ரைன் போரினால் சுமார் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இரு நாடுகளுக்குள் காணப்படும் போர்கள் நிறுத்தப்பட ஜெபிப்போம். போரினால் சுமார் 7000 மக்கள் உயிரிழந்துள்ளதாக ஐ.நா தெரிவிக்கிறது. தேசத்தில் உள்ள மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.



எலும்புகளை, தொண்டையை பாதிக்கக்கூடிய வினோதமான கொள்ளை நோய் தேசத்தில் புகுந்து மனிதர்களை பாதிக்காதபடி, தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம். உலக அளவில் இவ்வித நோயினால் பாதிக்கப்பட்டு அநேக மரணங்களை ஏற்படுத்த சாத்தான் வைத்திருக்கும் தந்திரமான திட்டங்கள் அழிக்கப்பட ஜெபிப்போம்.



ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு அனுதினமும் சபைகளில் சேர்க்கப்படவும், சபைகள் வளர்ந்து பெருகவும் ஜெபிப்போம். சபை தலைவர்கள், மூப்பர்கள் மீது ஆவியானவர் ஊற்றப்படவும் ஜெபிப்போம்.





தேவன் விரும்பும் பரிசுத்தம் சபைகளுக்குள், ஊழியர்களுக்குள் விசுவாசிகளுக்குள் காணப்பட ஜெபிப்போம். கர்த்தரை குறித்த பயத்தோடு ஊழியம் செய்யவும் ஜெபிப்போம்.



ஜெபிக்கிற சபைகளாக, ஆத்ம பாரமுள்ள சபைகளாக நம் சபைகள் மாற ஜெபிப்போம். சபைகளுக்குள் அற்புத அடையாளங்கள் மற்றும் வரங்கள் வெளிப்பட ஜெபிப்போம். எல்லா சபைகளிலும் ஒரு மனம், அன்பு, ஐக்கியம் உண்டாக ஜெபிப்போம். சபைகளுக்கு ஆத்துமாக்கள் வரக்கூடாதபடி தடை பண்ணுகிற வல்லமைகள் கட்டப்பட ஜெபிப்போம்.



பரிசுத்த ஆவியானவர் சபைகளில் ஊற்றப்படவும், ஆவியானவர் கிரியை செய்யவும் ஜெபிப்போம். தரிசனம் உள்ள சபைகளாகவும், ஜெபிக்கிற சபைகளாகவும் நம் சபைகள் மாற ஜெபிப்போம். தேவன் விரும்பும் பரிசுத்தம் சபைகளுக்குள், ஊழியர்களுக்குள் விசுவாசிகளுக்குள் காணப்பட ஜெபிப்போம்.



உலக அளவில் மனிதர்களால் உருவாக்கப்படும் மருந்துகளினால் அநேகரை பலவீனப்படுத்தி மரணத்திற்குள்ளாக்க திட்டமிடும் காரியங்கள் வாய்க்காமல் போக ஜெபிப்போம். பொல்லாத மனிதர்களால் உருவாக்கப்படும் மருந்துகளினால் வரப்போகும் மரண அலை தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.

# பிப்ரவரி 2023

கடைசி காலங்களில் பெரு வர்த்தகர்கள், தேசங்களை ஆளுகிற தலைவர்களோடு இணைந்து உலகத்தை தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு சாத்தான் எடுத்து வருகிற திட்டங்கள் வாய்க்காமல் போக ஜெபிப்போம். உலக அளவில் ஏற்படவிருக்கும் பஞ்சங்கள் நம் தேசங்களில் ஏற்படாதவாறு தேவன் ஜனங்களை போஷிக்க ஜெபிப்போம்.



அமெரிக்கா, ஐரோப்பா போன்ற வளர்ந்த நாடுகளில் கூட உணவிற்காக அலையும் நாட்கள் வருகிறது. பஞ்சங்கள் ஏற்படாமல் தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம். உலக பொருளாதாரத்தை தங்கள் கைக்குள் கொண்டு வர சில நிறுவனங்களும், தலைவர்களும் இணைந்து மாயையான காரியங்களை செய்து பஞ்சத்தை உருவாக்க எத்தனிக்கும் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.





விவசாயிகள், சிறு தொழில் செய்கிறவர்கள் மற்றும் மீனவர்களுக்கு எதிராக ஏற்றப்படும் சட்டங்கள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம். இயற்கையினால் ஏற்படும் அழிவுகள் தடுக்கப்படவும், ஜனங்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.




இந்திய கடலோர எல்லைகளில் தேவ ஆளுகையும் பாதுகாப்பும் உண்டாக ஜெபிப்போம். இலங்கை தேசத்தை பயன்படுத்தி, இந்திய தேசத்தின் ராணுவ தளங்களை உளவு பார்க்க திட்டமிட்டுள்ள சீனாவின் தந்திரம் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.



இந்திய தேசத்தின் பிரதமர், ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பாராளுமன்ற சபாநாயகர், 29 மத்திய அமைச்சர்கள், 543 பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காகவும், நல்ல சுகத்திற்காகவும் ஜெபிப்போம்.



தமிழக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களுக்காக, ஆளுநர் திரு R.N.ரவி அவர்களுக்காக, தலைமைச் செயலர் திரு வெ.இறையன்பு அவர்களுக்காக, 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்காக, 33 அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக சுகத்திற்காக ஜெபிப்போம்.



இந்திய எல்லைகளுக்குள் சீன ராணுவம் நுழையாதபடி தடுக்கப்படவும், இந்திய சீன எல்லையில் சமாதானம் உண்டாகவும் ஜெபிப்போம். இந்தியாவிற்கு எதிராக நடத்தப்படும் டிரோன் தாக்குதல் கள் தடுத்து நிறுத்தப்படவும், ராணுவ வீரர்கள் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.



சிறப்புக் கட்டுரை : ஜெயசீலன்

# மாறுமா வாக்குத்தத்தங்களும், நிபந்தனைகளும்

அன்பு தம்பி, தங்கச்சி!

ஆண்டவராகிய இயேசுவின் பெயரில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இம்மாதம் தொடங்கி இந்த ஆண்டு முழுவதும் நிபந்தனைகளும்-வாக்குத் தத்தங்களும் என்ற தலைப்பில் தியானிக்க இருக்கிறோம்.

ஆண்டவராகிய கர்த்தர் வேதத்தில் நூற்றுக்கணக்கான வாக்குத்தத் தங்களை நமக்காக எழுதி கொடுத் திருக்கிறார். அவற்றை ஜெபமாகவோ, பாடலாகவோ அறிக்கை செய்து நம்மு டைய வாழ்க்கையில் சுதந்தரித்துக் கொள்ள நாம் பிரயாசப்படுகிறோம். ஆனால் ஒரு சில வாக்குத்தத்தங்கள் மட்டுமே நம் வாழ்வில் நிறைவேறி இருக்கும். இன்னும் பல, நாம் எவ்வளவு போராடி ஜெபித்தாலும் அதின் ஆசீர்வாதத்தைப் பெற்று அனுபவிக்க முடியாமல் இருக்கும். இதற்கு காரணம், நாம் அந்த வாக்குத்தத்தங் களில் நம்மை சந்தோஷிப்பிக்கும், உற்சாகப்படுத்தும், ஆசீர்வாதமான, செழிப்பின் வார்த்தைகளை மட்டும் எடுத்து கொண்டு, அந்த வாக்குத்தத்தம் நிறைவேற அதனோடு கூட தேவன் கொடுத்திருக்கும் நிபந்தனைகளை உற்று நோக்க மறந்து விடுகிறோம்.

ஒவ்வொரு வாக்குத்தத்தத்தின் துவக்கமோ, முடிவோ, நீ இதைச் செய் தால், நான் இதைச் செய்வேன் என்ற ஆண்டவரின் நிபந்தனைகளைக் (Conditions) காண முடியும். ஒரு வாக்குத்தத்தம் நிறைவேற கர்த்தரு டைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது அவசியமாயிருக்கிறது. இதை வேதாகம பக்தர்களின் அனுபவங்களைக் கொண்டு அறிந்து கொள்வோம்.

## ஆபிரகாம்

ஆதி. 22:17, 18 வசனங்களில், எத்தனை பெரிய ஒரு வாக்குத்தத்தம் சொல்லப்பட்டிருக்கிறது. **"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்... உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதி களும் ஆசீர்வதிக்கப்படும்..."** (ஆதி. 22:17,18). தேவாதி தேவன் ஆபிரகாமைப் பார்த்து, 'பூமியில் உன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்' என்று சொல்லியிருந்தால் கூட ஆச்சரியமல்ல, அதற்கும் மேலாக, 'உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்' என்று சொல்கிறார். இதில் ஒரு பெரிய பிரமிப்பு என்ன தெரியுமா? வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய மகாப் பெரிய தேவன், 'என் பெயரில் ஆணையிட்டேன்' என்று, ஆபிரகாமுக்கு சத்தியம் செய்து சொல்வதாக இங்கு எழுதப்பட்டுள்ளது. யாருக்குக் கிடைக்கும் இந்த பாக்கியம் என்று நினைக்கின்றீர்களா?



இந்த வாக்குத்தத்தத்தை. ஆண்டவராகிய தேவன் சொப்பனத்திலோ, தரிசனத்திலோ, அல்லது ஏதோ போகிற போக்கிலோ ஆபிரகாமை அழைத்துச் சொல்ல வில்லை. இந்த வாக்குத்தந்தத்தைப் பெற, ஆபிரகாம் யாரும் செய்ய முடியாத, ஒரு பெரிய தியாகத்தையும், விலைக்கிரயத்தையும் தரவேண்டியதாயிருந்தது.


18ஆம் வசனம், 'நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த படியினால்' எனத் தொடங்குகிறது. தேவன், ஆபிரகாமிடம் என்ன சொன்னார்? அதற்கு ஆபிரகாம் எப்படிக் கீழ்ப்படிந்தார் என்பதை பார்ப்போமா?

ஆபிரகாம் பெயெர்செபா என்ற இடத்திலே குடியிருந்த காலம், சதாகாலமுள்ள தேவனாகிய கர்த்தர் (EI-OLAM), ஆபிரகாமை அழைத்து, எனக்கு நீ ஒரு தகனபலி செலுத்த வேண்டும் என்று சொல்கிறார். ஆண்டவர் பலியிடச் சொன்னது; ஒரு எருதையோ, ஆட்டையோ, கன்றுக் குட்டியையோ, புறாவையோ அல்ல! ஆபிரகாம்-சாராள் தம்பதியினர், தங்களுக்குத் திருமணமாகி 75



ஆண்டுகளுக்கு மேல் காத்திருந்து பெற்ற, தங்கள் ஒரே மகனான ஈசாக்கை (ஆதி. 21:5) ஆண்டவர் பலியிட சொன்னார். ஒரு நொடி ஆபிரகாமுக்கு இருதயமே நின்று போகும் அளவுக்கு அதிர்ச்சியாயிருந்திருக்கு மல்லவா?

ஆபிரகாமின் 100வது வயதில் பிறந்த மகன் ஈசாக்கு. முதிர்வயதில், கர்த்தர் தங்களுக்குத் தந்த செல்லமகன் என்று, தங்கள் ஏக்கம், கனவு, அன்பு, முழுவதையும் கொட்டி, ஆசை ஆசையாய் வளர்த்திருப்பார்கள். எத்தனை பிள்ளைகள் இருந்தாலும், எப்படியாவது கஷ்டப்பட்டு வளர்க்கவே பெற்றோர் விரும்புவர். பிள்ளைகளை இழக்கவோ, யாருக்கும் கொடுக்கவோ விரும்பமாட் டார்கள். சில பெற்றோர். தவமிருந்து பெற்ற பிள்ளை என்பார்கள். அப்படி, தவமாய்த் தவமியிருந்தது போல, பல்லாண்டுகள் காத்தி ருந்து பெற்ற பிள்ளை ஈசாக்கு, ஆண்டவர் அவர்களுக்கு கொடுத்த பிள்ளையை, இப்போது தனக்கே பலியிடு என்று கேட்கிறார்.



இந்த வசனத்தில், **"...உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை..."** (ஆதி. 22:2) என்று தேவனாகிய கர்த்தர், 'உன்' என்ற வார்த்தையை மூன்று முறையும், "புத்திரன், ஏகசுதன், நேசகுமாரன்" என்ற அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளையும் பயன்படுத்தியிருப்பதைப் பார்க்கிறோம். அப்படியானால், ஆபிரகாமுக்கு மகன் ஈசாக்கு எவ்வளவு முக்கியம் என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தும், ஆபிரகாமுக்கு, எது முக்கியமோ? எது பிரியமோ? எது ஆசையோ? அதையே தனக்கு பலிப்பொருளாய், பலி செலுத்தும்படி கேட்கிறார். நினைக்கும்போதே, நெஞ்சம் கலங்குகிறல்லவா?

ஆனால், ஆபிரகாம், கர்த்தருக்கு எந்த மறுப்பும் சொல்லவில்லை. ஆண்டவரோடு போராடவில்லை. வாக்குவாதம் செய்யவில்லை. எனக்கு யோசிக்கக் கொஞ்சம் நேரம் கொடுங்கள். நான் என் மனைவியிடம் கேட்க வேண்டும் என சாக்குச் சொல்லி காலம் தாழ்த்தவில்லை. மாறாக கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்து, மகன் ஈசாக்கை அழைத்துக் கொண்டு தன் பயணத்தைத் தொடங்கினார்.

மூன்று நாட்களுக்குப் பின் ஆபிரகாம், ஆண்டவராகிய தேவன் தனக்கு குறித்த இடத்திற்கு வந்து சேர்ந்து, கர்த்தர் சொன்னபடியே, ஒரு பலிபீடம் கட்டி. தன் ஒரே மகனாகிய ஈசாக்கைத் தூக்கி பலிபீடத்தில் கிடத்தி, தன் அன்பு மகனைப் பலியிட கத்தியை ஓங்கிவிட்டார். தொடர்ந்து அங்கு நடந்த சம்பவம் வேறு. ஆனால் இந்த நிகழ்வுக்குப் பின்பு தான், மேலே சொல்லப்பட்ட ஒரு பெரிய வாக்குத்தத்தத்தைக் கர்த்தர் ஆபிரகாமுக்குத் தந்து, ஈசாக்கின் மூலம் ஒரு பெரிய சந்ததி உருவாகும்படி செய்தார்.

அன்பான வாலிப தம்பி, தங்கைகளே! உங்களுக்கும் கூட கர்த்தர், அநேக வாக்குகளைத் தந்திருக்கலாம், அது ஒருவேளை இதுவரை நிறைவேறாமல் இருக்கலாம். வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டுமானால், இந்த வாலிப வயதில் உங்களுக்கு, எது முக்கியமோ? எது பிரியமோ? எது ஆசையோ? நீங்கள் விரும்புகிற, நேசிக்கிற காரியங்களை, உங்கள் விருப்பங்களை, தேவையற்ற தொடர்புகளை, கர்த்தர் விரும்பாத அருவருப்புகளை, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவைகளை பலிபீடத்தில் வைத்து விடுங்கள்.

இதுதான் சரியான வழி என்று உங்க ளுக்குத் தோன்றுகிறதைத் தேர்ந் தெடுக்காமல், உங்கள் வழிகளைக் கர்த்தரிடம் ஒப்படையுங்கள், கீழ்ப்படி, மேற்படிக்கு முதற்படி என்பார்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் உங்களில் நிறைவேற, முதலாவது கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய உங்களை அர்பணியுங்கள். கர்த்தர் உங்கள் வாழ்வில் மாபெரும் காரியங்களைச் செய்வார். உங்கள் குடும்பத்தில், உங்களை அற்பமாய் நினைத்த உறவுகள், நண்பர்களுக்கு மத்தியில் உங்களை ஆசீர்வதித்து, உயர்த்தி அநேகருக்கு ஆசீர்வாதமாக வைப்பார். ■

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

**மாதாந்திரக் கூடுகை**

## EVERY 1st SUNDAY (5th February)

**VELLORE (3PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center, #62, 2nd Floor, Benny Kumaran Main Road. 9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
Gethsamane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor Tiruchendur Road, Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd.
9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church
9985033401 / 9442885315

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center, Sekihnah Mahal, Mullai Nagar. 9750955548 | 8344949555

## EVERY 2nd SATURDAY (11th FEBRUARY)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road, Railway Line Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office. 9962085523 | 9591077110

## EVERY 2ND SUNDAY (12th FEBRUARY)

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**THANJAVUR (3PM)**
Gethsamane Prayer Center,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677859766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building, R.A. Nursing Institute, SCV Computers (top Floor)
Main Road, Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
Gethsamane Prayer Center,
#203, Madurai Road, Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Gethsamane Prayer Center,
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher, Secondary School
Mela Sathankulam. 9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School, Tirukazhukundram Road
9488475315

**EVERY 3RD SATURDAY (18th FEBRUARY)**

**MADURAI (3PM -5:30PM)**
American College Higher Secondary School,
AC School Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

**EVERY 3RD SUNDAY (19th FEBRUARY)**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
Gethsamane Prayer Center, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
Gethsamane Prayer Center, 22A, 1st Floor
Thennur High Road, Near KMC Bus Stop,
Thennur. 9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via)
Tenkasi Dist. 8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
Gethsamane Prayer Center,
1A/25B, Bypass Road (opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
Gethsamane Prayer Center, MBT Road,
Navalpur. 9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
Gethsamane Prayer Center, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**EVERY 4TH SATURDAY (25th FEBRUARY)**

**PERAMBALUR (5PM -8PM)**
Gethsamane Prayer Center, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

**EVERY 4TH SUNDAY (26th FEBRUARY)**

**THIRUVALLUR (3PM -5:30PM)**
Gethsamane Prayer Center, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
Gethsamane Prayer Center, Near Arun Hospital
Royakottai Road. 9962085523 | 9524999711

**MUMBAI (5PM – 8PM)**
1st SUNDAY - Dharavi
2nd SUNDAY – Bhandup
3rd SUNDAY - Malad
9004882470

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
YouTube Comforter DIGITAL CHANNEL
சத்தியம் TV சனிக்கிழமை தோறும் 6:30 am
7 am YouTube மற்றும் Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
9750955547









# ARE YOU READY?

## தேர்வுக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு ஒரு சில ஆலோசனைகள்...




**பதட்டத்தை தவிர்க்கவும்:** தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் பதட்டமாக இருக்கக் கூடாது. பதட்டம் படித்தவற்றை மறக்கச் செய்யும்.

**புரிந்து படிக்கவும்:** படிக்கும்போது பாட புத்தகத்தில் உள்ளது போல் எழுத வேண்டும் என்று மனப்பாடம் செய்து படிக்காமல், புரிந்து படிக்கும்போது பதில் களை எழுதுவது மிகவும் சுலபமாக இருக்கும்.

**அட்டவணை தயார் செய்யுங்கள்:** தேர்வுகள் நெருங்கி விட்டால் எதைப் படிக்க வேண்டும் என்பதில் பல குழப்பங்கள் வரும். எனவே கால அட்டவணை வைத்து அதனை பின்பற்றி படிக்க வேண்டும்.

**நேரம் ஒதுக்குங்கள்:** எந்த பாடம் கடினமாக இருக்கிறதோ அதற்கு அதிக நேரம் செலவிட வேண்டும் என்று நினைத்து அதனை மட்டும் அதிக நேரம் படித்து மற்ற பாடங்களில் படித்தவற்றை மறந்து விடுவீர்கள். அதனால் தனித்தனியாக நேரம் ஒதுக்கி படித்தால், கண்டிப்பாக நல்ல மதிப்பெண்கள் பெற முடியும்.

**முக்கியமானவற்றை படியுங்கள்:** தேர்வுக்கு கடைசி நேரத்தில் தயாராகும் மாணவர்கள் எதனை படிப்பது என்று தெரியாமல் குழப்பத்தில் இருப்பார்கள். ஆசிரியர்கள் சொன்ன முக்கியமான கேள்வி பதில்களை படித்தால் வெற்றி பெறக் கூடிய அளவிற்கு மதிப்பெண் பெறலாம்.

**சரியான சாப்பாடு:** தேர்வு எழுதும் குழந்தைகளுக்கு உணவு என்பது மிகவும் முக்கியம். அவர்கள் கவனம் முழுவதும் தேர்வு எழுதுவதில் இருப்பதால், சாப்பிடா மல் சென்று விடுவார்கள். சாப்பிடாமல் தேர்வுக்கு சென்றால் ஒழுங்காக தேர்வு எழுத முடியாது. ஆகையால் கண்டிப்பாக இரண்டு இட்லி அல்லது ஒரு டம்ளர் பால் குடித்து தான் செல்ல வேண்டும். இது மட்டுமின்றி தேர்வு காலங்களில் வெளி உணவுகளை முடிந்த அளவு தவிர்த்து ஆரோக்கியமான வீட்டு உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

**தேவையான தூக்கம்:** உணவு எவ்வளவு முக்கியமோ அதேப்போல் தூக்கமும் முக்கியம். நன்றாக தூங்கினால் மட்டுமே கவனம் முழுவதும் படிப்பில் இருக்கும். இல்லையென்றால் தேர்வறையில் தூக்கம் வரும். அதனால் தேர்வு எழுதுவது மிகவும் கடினமாக இருக்கும்.

அன்பான பிள்ளைகளே! இவை எல்லாவற்றிக்கும் மேலாக முதலாவது கர்த்தருக்கு முதலிடம் கொடுங்கள். ஜெபித்து விட்டு படியுங்கள். கர்த்தர் உங்களோடு இருந்து உங்கள் கரத்தைப் பிடித்து நடத்துவார்.

**"குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்"** (நீதி. 21:31) என்ற வார்த்தைக்கேற்ப நாம் செய்ய வேண்டிய ஆயத்தங்களை சரியாக செய்து, ஜெபித்து, ஆண்டவரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் பொழுது நிச்சயமாக வெற்றி உண்டு. ஜெயம் உங்களுக்கு! ■





எழுப்புதல் செய்தி: சதீஷ்

# இரட்சிப்பின் எழுப்புதல்!

**அப்போஸ்தலர்களின் காலத்தைத் தொடர்ந்து இந்நாள் வரைக்கும் தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஜனங்களுடைய வாழ்வில் தனது இரட்சிப்பின் கிரியைகளை செய்து வருகிறார். இரட்சிப்பின் எழுப்புதல் ஊற்றப்படும் போது திரளான ஜனங்கள் இயேசுவின் பக்கம் திரும்புகின்றனர். அப்போஸ்தலர் நாட்களில் இரட்சிக்கப்பட்டோர் அனுதினமும் சபையில் சேர்க்கப்பட்டனர். சபைகள் பலுகி பெருகியது. திரளான புறஜாதியினர் தங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டு இயேசுவின் பக்கமாக திரும்பினர்.**

பழைய ஏற்பாடு காலத்தில் நினிவேயின் பாவம் தேவ சமூகத்திற்கு வந்து எட்டினபோது, அவர் அப்பட்டணத்தை அழிக்க முற்பட்டார். இதை அறிந்த நினிவே மக்கள் தங்கள் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பியதால் ஆண்டவர் அவர்களை அழிக்காமல் விட்டார். இதன் விளைவாக லட்சத்து இருபதினாயிரம் பேர் கர்த்தர் பக்கம் திரும்பினர். பழைய ஏற்பாட்டு காலத்தில் புறஜாதியார் மத்தியில் உண்டான மாபெரும் இரட்சிப்பின் எழுப்புதல் இதுவாகும்.

1940ஆம் ஆண்டு ஜெர்மன் தேசத்தில் பிறந்த ரெய்னார்டு போங்கே என்ற தேவ மனிதர் மூலமாக ஆப்பிரிக்கா கண்டமே அசைக்கப்பட்டது. தனது 10வது வயதில் ஆப்பிரிக்கா தேசத்திற்கு மிஷனரியாக புறப்பட்ட இவர், கல்லூரிப் படிப்பை முடித்து இறையியல் பட்டம் பெற்று ஜெர்மனியில் 7 ஆண்டுகள் ஊழியம் செய்தார். பின்பு ஆப்பிரிக்காவில் தனது ஊழியத்தைத் தொடங்கினார். ஆரம்ப கால கட்டத்தில் சில நூறுகளாக நடைபெற்ற இவருடைய கூட்டங்கள், பிற்காலத்தில் சர்வ சாதாரணமாக லட்சத்திற்கும் அதிகமான ஜனங்கள் வர ஆரம்பித்தனர். இவர் மூலமாக அநேக அற்புத அடையாளங்கள் நடைபெற்று திரளான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டனர். ஏறக்குறைய 79 மில்லியன் ஜனங்களுக்கு இவர் மூலமாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேவ மனிதன் மூலமாக இருண்ட கண்டம் வெளிச்சம் பெற்றது. இவர் கூட்டங்களில் லட்சக்கணக்கான ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் பக்கம் திரும்பினர். இவர் மூலமாக ஆப்பிரிக்காவில் மாபெரும் எழுப்புதல் உண்டானது.

எனக்கன்பான வாலிபர்களே, நம் தேசத்திலும் ஆண்டவர் இப்படிப்பட்ட காரியங்களை செய்ய விரும்புகிறார். ஆண்டவரே என்னையும் பயன்படுத்தும் என்று உங்களை அர்ப்பணிக்கும் போது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்கள் மூலமாக வெளிப்பட்டு, இருளில் இருக்கிற ஜனங்கள் வெளிச்சத்தை காண்பார்கள். **"...யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்..."** (ஏசாயா 6:8) என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டு நீங்கள் புறப்பட்டு போனால் திரளான ஜனங்களை ஆண்டவர் உங்களை கொண்டு இரட்சிப்பார், தாமதம் செய்யாதீர்கள், இரட்சிப்பின் எழுப்புதல் ஊற்றப்பட்டு விட்டது, புறப்பட்டு போங்கள்! ■





நிகழ்வு : காலேப்

# ஓடுகளம்

## (எழுப்புதல் ஓட்டம்)

ஓட்டப்பந்தயம் என்றாலே முதலில் நம் நினைவிற்கு வருவது 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டங்களாகும். மக்களின் ஆரவாரத்தில், கண் இமைக்கும் நேரத்தில் வீரர்கள் 100 மீட்டர் ஓட்டத்தை ஓடி முடிப்பார்கள். ஒரு சில வினாடிகள் மட்டும் நடைபெறும் இந்த ஓட்டப்பந்தயத்தைப் பார்க்க ஆவலாக கூடி வருவார்கள். ஆனால் மாரத்தான் ஓட்டப்பந்தயம் அப்படிப்பட்டதல்ல, அது சில மணி நேரங்கள் தொடர்ச்சியாக ஓட வேண்டியதாக இருக்கும். ஆரம்பத்தில் நன்றாக ஓடினால் மட்டும் போதாது, இறுதிவரை நிற்காமல் ஓட வேண்டும். பொதுவாக மாரத்தான் ஓட்டம் ஆரம்பிக்கும் போது நூற்றுக்கணக்கான பேர் ஓட ஆரம்பிப்பார்கள். ஆனால் முடிவில் வெகு சிலர் மட்டுமே ஓடி முடிப்பார்கள். ஆரம்பித்த அநேகர் கால்வாசி தூரத்தில், பாதி தூரத்திலேயே ஓட முடியாமல் நின்று விடுவார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு, தேவன் நியமித்திருக்கிற ஓட்டம் மாரத்தான் ஓட்டம் போல் தான். மாரத்தான் ஓட்டத்தில் ஆரம்பத்தில் நன்றாக ஓடினால் மட்டும் போதாது, இறுதி வரை நிற்காமல் ஓடி பந்தயக் கோட்டை அடைய வேண்டும். “ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” (எபி. 12:1) என்று பவுல் எழுதியிருக்கிறார். இந்த ‘எழுப்புதலின் ஓட்டம்’ தொடர் மூலமாக வேதாகமத்தில் பல தடைகளைத் தாண்டி தேவனுக்காக ஓடியவர்களைக் குறித்தும், மாரத்தான் பந்தயத்தில் சாதித்தவர்களைக் குறித்தும் பார்க்க போகிறோம்.



லித்துவேனியா நாட்டை சேர்ந்த அலெக்சான்டர் சோரோகின் என்பவர், தனது 32வது வயது வரை சாதாரண சுவாரஸ்யமில்லாத வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருந்தார். ஆனால், நானும் ஏதாவது சாதிக்க வேண்டும் என்கிற வாஞ்சை ஏற்பட, மாரத்தான் வீரராக பயிற்சி எடுக்க ஆரம்பித்தார். ஆனால் 32 வயது ஆகிவிட்டது, மாரத்தான் ஓட்டத்தில் ஓடினாலும் சாதனை எதுவும் படைக்க முடியாது என்று அநேகர் நினைத்தனர். 2021ம் ஆண்டு, 8 ஆண்டுகள் பயிற்சிக்கு பின்பு தனது 40வது வயதில் 319.4 கி.மீட்டர் தூரத்தை 24 மணி நேரத்தில் ஓடி, 25 ஆண்டு சாதனையை முறியடித்தார் அலெக்சான்டர் சோரோகின். அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற 7 உலக சாதனைகளையும் படைத்துள்ளார். ஒருவேளை அலெக்சான்டர் தனக்கு வயது ஆகிவிட்டது என்று முயற்சி எடுக்காமல் இருந்திருந்தாலோ, இத்தனை கடினமாக பயிற்சி செய்ய வேண்டுமா என்று நினைத்திருந்தாலோ இவ்வளவு பெரிதான சாதனைகளைப் படைத்திருக்க முடியாது.

**ஆரம்பத்தில் நன்றாக ஓடினால் மட்டும் போதாது, இறுதிவரை நிற்காமல் ஓடவேண்டும்.**

இதேபோல் தான் நம் வேதாகமத்தில் ஒரு ஓட்டத்தைக் குறித்து தியானிக்கப் போகிறோம். அவர்கள் ஏன் ஓடினார்கள்? அதனால் என்ன நன்மை ஏற்பட்டது? என்பதை பார்க்கலாம்!

2 இராஜாக்கள் 7ம் அதிகாரத்தில், இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றிலும் சீரிய இராணுவத்தினர் முற்றுகையிட்டிருந்தனர். அதனால் தேசம் முழுவதும் மிகுந்த பஞ்சம் ஏற்பட்டு, தேசமே ஸ்தம்பித்திருந்தது. அந்த தேசத்தில் எல்லாராலும் ஒதுக்கப்பட்டிருந்த குஷ்டரோகிகள் 4 பேர் என்ன செய்தார்கள்?

## துணிந்து சென்றார்கள்

இஸ்ரவேல் தேசத்தில் குஷ்டரோகிகள் மக்களோடு வாழ முடியாது, அவர்கள் பட்டணத்திற்கு வெளியே தங்க வைக்கப்பட்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை இருந்தும், தேசத்தில் இருக்கும் பஞ்சத்தைப் பார்த்து, நாம் ஏன் இப்படியே மரிக்க வேண்டும். குஷ்டரோகத்தினால் கைகள், கால்கள் எல்லாம் அரித்து போயிருக்கும், அதையும் பொருட்படுத்தாமல் சீரிய இராணுவத்திற்கே சென்று, அங்கு நாம் மரித்தாலும் மரிக்கலாம் என்று துணிந்து சென்றனர். இஸ்ரவேல் தேசத்தின் இராஜா, அதிபதிகள் யாரும் சீரிய இராணுவத்தை எதிர்க்கவோ, சந்திக்கவோ துணியவில்லை. ஆனால் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட குஷ்டரோகிகள் துணிந்து சென்றதின் நிமித்தம் தேவன் அவர்களின் ஓட்டத்தை இரதங்களின் இரைச்சலாக மாற்றி, சீரிய இராணுவத்தை சிதறடித்தார். ஒருவேளை அவர்கள் போகாமல் இருந்திருந்தால் தேசத்தின் பஞ்சம்



**இந்த நற்செய்தியை அனைவருக்கும் அறிவிக்க வேண்டும்**

மாறியிருக்காது. தேவன் தாலந்து இருந்தும் பயன்படுத்தாமல் இருப்பவர்களைவிட, தாலந்து இல்லாமல் இருந்தும் துணிந்து வருகிறவர்களையே எதிர்பார்க்கிறார்.

## சுயநலமில்லாமல் செயல்பட்டார்கள்

சீரியர்கள் பாளயத்தில் இல்லை என்று அறிந்ததும், அவர்கள் ஒவ்வொரு கூடாரத்திற்குள்ளும் பிரவேசித்து உணவு, தங்கம் மற்றும் வெள்ளியையும் கொள்ளையிட்டு கொண்டிருந்தனர். ஆனால் சிறிது நேரம் கழித்து அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, "நாம் செய்வது நியாயமல்ல, இந்த நற்செய்தியை நமக்குள் மட்டும் வைத்திருக்கக் கூடாது, அனைவருக்கும் அறிவிக்க வேண்டும்" என்று மீண்டும் பட்டணத்திற்குள் வேகமாக ஓடினார்கள். தங்களுடைய பசி தீர்ந்து விட்டது, தங்களுக்கு தேவையான பொருட்கள் கிடைத்து விட்டது என்று சுயநலமாக இல்லாமல், இந்த நன்மை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று செயல்பட்டதினால் தேசத்தின் பஞ்சம் மாறினது. இன்றைக்கும் நம் ஓட்டத்தை தடை செய்வது சுயநலமே. சுயநலமில்லாமல் தேவனுக்காக உண்மையாக செயல்படுவோமானால் தேசத்தின் பஞ்சத்தை மாற்ற முடியும்.

அன்பான வாலிபர்களே, நம்முடைய வாழ்விலும் பல தடைகள், பெலவீனங்கள் நம்மை முன்னேறி செல்ல விடாமல் தடுத்து கொண்டிருக்கலாம். எனக்கு எந்த தாலந்தும் இல்லை, நான் மற்றவர்களைப் போல இல்லை என்கிற எண்ணம் நம்மில் மேலோங்கி நின்று, நாம் தேவனுக்காக பிரகாசிக்க முடியாமல் முடக்கியிருக்கலாம். ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட குஷ்டரோகிகளின் ஓட்டத்தை இரதங்களின் இரைச்சலாக மாற்ற முடியுமென்றால், உன் வாழ்க்கையையும் தேவனால் மாற்ற முடியும். அதற்கு நாம் துணிந்து, சுயநலமில்லாமல் செயல்படுவோமானால் நம் மூலமாக தேசத்திற்கு இரட்சிப்பை உண்டாக்க தேவனால் முடியும். ■

**"எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது..."**
(ஏசாயா 60:1).

அடுத்த மாதம் இன்னொரு எழுப்புதல் ஓட்ட வீரரைக் குறித்துப் பார்க்கலாம்...

பேசலாம் வாங்க : வயலா

# Coffee with பத்திரிக்கையாளர்



**பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் இடம் பெற்றிருக்கும் பல நபர்கள் பல முக்கிய காரியங்களை தேவ நாமம் மகிமைப்படும்படி செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்களோடு பத்திரிக்கையாளர் சந்திப்பு இருக்குமாயின், அவர்கள் மத்தியில் நடைபெறும் உரையாடலின் கற்பனைத் தொகுப்பை கீழே காண்போம்.**

*இந்த வருடத்திலும் முதலாவது இயேசுவிடம் அற்புதத்திற்காக வேண்டி, அவருக்கு கீழ்ப்படிந்து அவர் சொற்படி ஆசாரியரிடம் காண்பிக்க சென்ற போது குஷ்டரோகத்திலிருந்து ஆரோக்கியமடைந்த பத்து குஷ்டரோகிகளில் இயேசுவுக்கு மகிமையை செலுத்தும்படி திரும்பி வந்து ஸ்தோத்திரம் செலுத்திய ஒரே ஒரு நன்றியுள்ள குஷ்டரோகியை (லூக்கா 17:11-19) சந்தித்து உரையாடலாமா?*

***பத்திரிக்கையாளர்:*** வணக்கம் அண்ணே... நல்லா இருக்கீங்களா?

***நன்றியுள்ள குஷ்டரோகி:*** வணக்கம் என் வாழ்வில் நான் இயேசுவை சந்தித்த பின் தான் சரீரத்திலும், மனதளவிலும் நான் ரொம்ப நல்லா இருக்கேன்.

***பத்தி:*** அப்படியா அண்ணே, இயேசுவை சந்திக்கும் முன் எப்படி இருந்தீங்க? உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

***ந.கு:*** நான் சமாரியா நாட்டை சேர்ந்தவன், நான் கொடிய வியாதியாகிய குஷ்டரோகத்தினால் பாதிக்கப் பட்டு மிகுந்த வேதனையோடும், கண்ணீரோடும் வாழ்ந்து வந்தேன்.

***பத்தி:*** வீட்டிலா? மருத்துவமனையிலா?

***ந.கு:*** இரண்டிலும் இல்லை. குஷ்டரோகம் இருந்ததால் நாங்கள் தீட்டுள்ளவர்கள், தனியாகத் தான் இருக்க வேண்டும். எனவே பாளயத்திற்கு புறம்பே வசித்து வந்தோம். என்னோடு குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட்ட மற்றவர்களும் இருந்தார்கள். எங்கள் குடும்பத்தினரோடு மற்ற ஜனங்களைப் போல நாங்கள் வசிக்க முடியாது.

***பத்தி:*** அப்படியா? Zomato, Swiggy எல்லாம் இருந்திருக்காதே, சாப்பாட்டிற்கு என்ன செய்தீர்கள்?

***ந.கு:*** அதை ஏன் கேட்கிறீர்கள்? குஷ்டரோகிகளுக்கு படாத பாடு தான்! பெற்றோரோ, பிள்ளைகளோ, நண்பர்களோ அன்புடையவர்களாயிருந்தால் மட்டுமே அவர்கள் உணவைக் கொண்டு வந்து ஊரின் எல்லையில் வைத்து விட்டு சென்று விடுவார்கள். அவர்கள் சென்ற பிறகு நாங்கள் போய் எடுத்துக் கொள்வோம்.

***பத்தி:*** அந்த உணவு போதுமானதாக இருக்குமா?

***ந.கு:*** இல்லை, எல்லா குஷ்டரோகிகளுக்கும் உணவு கொடுக்கப்படமாட்டாது. வியாதியின் ஆரம்ப கட்டத்தில் உள்ளவர்களுக்கு விரல்கள் இருக்கும் அவர்களால் உணவு எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் ஒரு சிலருக்கு விரல்களே இருக்காது. அவர்களால் உணவை எடுத்துச் சாப்பிடவும்



முடியாது. அவர்கள் பாடு மிகவும் திண்டாட்டம் தான். சாப்பிட விரும்பமாட்டார்கள், சாவை தான் விரும்புவார்கள்.

***பத்தி:*** ஐயோ, பாவம்.

***ந.கு:*** பொதுவாகவே, குஷ்டரோகிகள் யாருமே உணவை விரும்பி எடுத்துக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் சரீரத்தின் வேதனை ஒரு பக்கம், மற்றொரு புறம் புண்களில் இருந்து வரும் நீர் மற்றும் இரத்தத்தின் நாற்றம், உணவைவிட சாவு எப்பொழுது வரும் என்று தான் காத்துக் கொண்டிருப்பார்கள்.

***பத்தி:*** யாருக்குமே இந்த வியாதி வரக் கூடாது அண்ணே!

***ந.கு:*** அதுமட்டுமல்ல வீட்டில் உடன்பிறப்புகளின் திருமணம், குழந்தைகளின் பிறந்த நாள், பண்டிகைகள் போன்றவற்றில் கலந்து உறவினர்களை எல்லாம் பார்க்க ஆசையாக இருக்கும். ஆனால் எங்காவது சென்றால் எங்களைப் பார்த்தவுடன் தீட்டு, தீட்டு என்று ஜனங்கள் சத்தமிடுவார்கள். சிலர் கல்லெறிவார்கள். எனவே எங்கள் இருப்பிடத்தை விட்டு எங்கும் செல்ல விரும்ப மாட்டோம்.




***பத்தி:*** எப்படி அண்ணே இவ்வளவு கஷ்டத்தையும் சகிச்சீங்க? அப்புறம் என்ன ஆச்சு அண்ணே?

***ந.கு:*** சொல்றேன். இப்படி இருக்கையில் தான் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டோம். “இயேசுவின் வார்த்தையில் அற்புதம், தொட்டால் சுகம், குருடர்கள் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்” என்று ஜனங்கள் பேசிக் கொள்வதை கேட்டறிந்தோம். எப்படியாவது இயேசுவை சந்திக்க வேண்டும் என்று மனம் ஏங்கியது. இயேசுவால் எங்களையும் சுகப்படுத்த முடியும் என்று எங்களையும் அறியாமல் எங்களுக்குள் விசுவாசம் வந்தது.

***பத்தி:*** அப்படியா? அப்புறம் என்ன நடந்தது?

***ந.கு:*** ஒருமுறை இயேசு எங்க கிராமத்து வழியா போறதாக கேள்விப்பட்டு வேகமா போனோம். இயேசுவை சுற்றி கூட்டமா இருந்திச்சி. நாங்க தூரத்துல நின்று, இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமா கூப்பிட்டோம். உடனே இயேசு நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களை காண்பியுங்கள் என்று சொன்னார். சுகமானா தானே ஆசாரியர்களுக்கு நம்மை காண்பிக்கனும், அதுக்குள்ள எதுக்கு காண்பிக்க சொல்கிறார் என்று சிந்தித்து கொண்டே போய்கிட்டு இருந்தேன். திடீரென்று பார்த்தால் ஆச்சரியம் தாங்க முடியல... நம்பவும் முடியல. என்னுடைய குஷ்டரோகம் முற்றிலுமாய் மறைந்தது. இயேசு உண்மையிலே அற்புதமானவர்! என் தோலைப் பார்த்தால், ஒரு குழந்தையோட சருமம் போல அவ்வளவு மென்மையாக மாறி இருந்தது. என்னோட சந்தோஷத்துக்கு அளவே இல்லை. என் உள்ளம் நன்றியால் நிறைந்ததினால் நான் உடனே திரும்பி வந்து இயேசுவின் பாதத்தில் விழுந்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உரத்த சத்தத்தோடு தேவனை மகிமைப்படுத்தினேன். சுத்தமான மற்ற ஒன்பது பேர் எங்கே என்று இயேசு வினவினாலும் நான் ஒருவனாவது வந்து தேவனை மகிமைப்படுத்தியதினால் இயேசு மகிழ்ந்தார்.

***பத்தி:*** அப்பா! உங்களுக்கு சுகம் கிடைத்தது. அதுவும் அற்புதமாய் இயேசுவால் சுகமடைந்தது மிக்க மகிழ்ச்சி அண்ணே! நீங்க எங்க வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீங்க?

***ந.கு:*** நன்றி சொல்லும் இருதயம் இயேசுவை மகிழ்விக்கின்றது என்பதற்கு நான் சாட்சி. எனவே நீங்களும் ஒவ்வொருநாளும் இயேசு உங்களுக்கு செய்த நன்மைகளை எண்ணி எண்ணி நன்றி செலுத்துங்கள். முக்கியமாக ஆஸ்தி, அந்தஸ்து, ஐசுவரியம், வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் சரீர சுகத்திற்காக அனுதினமும் இயேசுவுக்கு நன்றி செலுத்துங்கள். குறிப்பாக மூளை, நுரையீரல், இருதயம், சிறுநீரகம் போன்ற முக்கிய உள்ளுறுப்புகளுக்காகவும், எலும்புகள், நரம்புகள், பற்கள், இரத்த ஓட்டம், உணர்வு, உறுப்புகளின் நேர்த்தியான செயல்பாட்டிற்காகவும் ஒவ்வொரு நாளும் நன்றி பலி ஏறெடுங்கள், அதில் இயேசு பிரியமாயிருக்கிறார்.

***பத்தி:*** உங்கள் நேரத்தை எங்களோடு செலவழித்தமைக்காக மிகவும் நன்றி அண்ணே!

***ந.கு:*** நன்றி! ■

செய்திகள்!

# எண்ணெய் குழாய் திறப்பு!

இந்தியா-வங்கதேசம் இடையேயான நட்புறவு எண்ணெய் குழாய் திட்டம் அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வரும் என அதிகாரி தெரிவித்தார். இந்தியா வங்கதேசம் இடையே, நட்புறவு எண்ணெய் குழாய் பதிக்கும் பணியை கடந்த 2018, செப்டம்பர் 18 அன்று வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, இந்திய பிரதமர் மோடி ஆகியோர் தொடங்கி வைத்தனர். மொத்தம் 130 கி.மீட்டர் தூரம் கொண்ட இந்த திட்டம் ரூ.377.08 கோடியில் செயல்படுத்தப்படுகிறது. அசாம், நுமலிகார் எண்ணெய் சுத்தகரிப்பு ஆலையின் சிலிகுரி டெர்மினலில் இருந்து வங்க தேசத்தின் பார்பதிபூர் டெப்போவுக்கு எரிபொருள் எடுத்து செல்லப்படும். இந்த திட்டத்தினால் வங்கதேசத்திற்கு எரிபொருள்கள் எடுத்து செல்வதற்கு போக்குவரத்து மற்றும் நேரம் பெருமளவு மிச்சமாகும்.





இந்நிலையில், நுமலிகார் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அதிகாரி கூறுகையில், “இந்தியா வங்கதேச நட்புறவு குழாய் திட்டம் கடந்த டிசம்பரில் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதில், 90 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. தற்போது அடுத்த மாதத்திற்குள் பணியை முடித்து வங்கதேசத்துக்கு எரிபொருள் அனுப்பப்படும். ஆண்டுக்கு 10 லட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் குழாய் வழியே ஏற்றுமதி செய்யப்படும்” என்றார்.

தினகரன், 09 ஜனவரி 2023.

# ரேடார் பொருத்திய டிரோன்கள்!

பாகிஸ்தான் எல்லையில் இந்தியாவுக்குள் ஊடுருவுதற்காக தோண்டப்பட்ட சுரங்கங்கள் உள்ளதா என்பதை கண்காணிக்க முதல் முறையாக ரேடார் பொருத்திய டிரோன்களை எல்லை பாதுகாப்பு படையினர் ஈடுபடுத்த உள்ளனர். பாகிஸ்தானில் இருந்து சுரங்கங்கள் தோண்டி இந்திய எல்லைக்குள் அத்துமீறி எல்லை தாண்டிய தீவிரவாதம், போதைப் பொருள் மற்றும் ஆயுதங்கள் கடத்தலில் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இந்த சுரங்கங்களின் வழியாக இந்தி யாவுக்குள் ஊடுருவி ஜம்மு காஷ்மீர் உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவிரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தனர். இந்தியா-பாகிஸ்தான் சர்வதேவ எல்லையில் கடந்த 3 ஆண்டுகளில் 192 கி.மீட்டர் தூரம் கொண்ட பூமிக்கடியில் இருந்த 5 சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு எல்லைப் பாதுகாப்புப் படையினரால் அழிக்கப்பட்டன. இந்நிலையில், ஜம்மு பகுதியில் உள்ள இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பூமிக்கடியில் சுரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்க எல்லை பாதுகாப்பு படையினர் முதல் முறையாக ரேடார் பொருத்திய டிரோன்களை ஈடுபடுத்த முடிவு செய்துள்ளனர். இவை முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை ஆகும். பூமிக்கடியில் சுரங்கங்கள் இருப்பதை கண்டறியும் இந்த டிரோன்கள் கண்டுபிடிக்கும். – தினகரன், 09 ஜனவரி 2023.




Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82A, Lakshmipuram, Nalumavadi - 628 211

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

# Achievers

## தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்புக் கூடுகை

மாணவர்களே! கலந்து கொள்ளுங்கள்! தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று செல்லுங்கள்!!

தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா? படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?

இயேசு உங்களுக்கு விடுதலை தருவார்!! வாருங்கள்! பங்கு பெறுங்கள்!

தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?

**ஜெபமலையில்**
**பிப்ரவரி 05**
2pm – 5pm

கீழமாதாபுரம், கடையம் ரோடு, ஜெபமலை
செய்தியும் ஜெபமும் : **சகோ. அவினாஷ்**
8270135303 / 9750955548

**பெரம்பலூரில்**
**பிப்ரவரி 05**
3pm – 6pm

இயேசு விடுவிக்கிறார் கெத்சமனே ஜெப மையம்,
71, MK காம்ப்ளக்ஸ் பேங்க் ஆப் பரோடா அருகில், வெங்கடேசபுரம்
செய்தியும் ஜெபமும் : **சகோ. சதீஷ் குமார்**
9788788512 / 9788812428



**தேனியில்**
**பிப்ரவரி 12**
2pm – 5pm

தாவீதின் கூடாரம் ஆராதனை மையம்.
JDN Complex, வைகை டாம் ரோடு, பெரியகுளம்
செய்தியும் ஜெபமும் : **சகோ. அவினாஷ்**
9750955548

ஆந்திரா மாநிலம்
**சித்தூரில்**
**பிப்ரவரி 12**
6pm – 9pm

இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகம்
2-1016, முதல் மாடி கமலாம்பாள் தெரு, Readspet, K.R. Palli, சித்தூர்
செய்தியும் ஜெபமும் : **சகோ. சதீஷ் குமார்**
9487734603

**திருச்சியில்**
**பிப்ரவரி 19**
3pm – 6pm

பாரீஸ் ஹால் (All Saints Church)
புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சி
செய்தியும் ஜெபமும் : **சகோ. சதீஷ் குமார்**
9489775075

**வால்பாறையில்**
**பிப்ரவரி 26**
3pm – 6pm

பாரீஸ் ஹால்,
Holy Trinity Church
செய்தியும் ஜெபமும் : **சகோ. சதீஷ் குமார்**
9486037586 / 9442885315



சகோ.
**அவினாஷ்**



சகோ.
**சதீஷ் குமார்**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 01 - 2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

## வாலிபர் எழுப்புதல் கூடுகை 2023

ஆந்திரா மாநிலம் புத்தூரில்...
**பிப்ரவரி 11**
சனிக்கிழமை (6PM – 9PM)
இடம் :
GOOD SHEPHERD COMPOUND, புத்தூர்
*செய்தியும் ஜெபமும்*
**சகோ. சதீஷ் குமார்**
தொடர்பு : 8886739633



தஞ்சாவூரில்...
**பிப்ரவரி 18**
சனிக்கிழமை (6PM – 9PM)
இடம் :
CSI செயிண்ட் பீட்டர்ஸ்
சர்ச் பாரீஸ் ஹால், தஞ்சாவூர்
*செய்தியும் ஜெபமும்*
**சகோ. சதீஷ் குமார்**
தொடர்பு : 9489775075

# தாழ்மையாக இருக்க சில வழிகள்

- முடிந்தவரை உங்களைக் குறித்து குறைவாக பேசுங்கள், மற்றவர்களின் சாதனைகளை பாராட்டுங்கள்.
- மற்றவர்களின் வேலை மற்றும் குறைகளில் தலையிடாமல் உங்களுடைய வேலையை மட்டும் செய்யுங்கள்.
- மற்றவர்களின் வாழ்க்கையில் நடப்பதை தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டாதீர்கள்.
- மற்றவர்களின் குறைகளை பெரிதுபடுத்தி புறங்கூறி பேசாதீர்கள்.
- மற்றவர்களை ஒருநாளும் தரக் குறைவாக பேசாதீர்கள், உங்களிலும் மேன்மையாக கருதுங்கள்.
- வயதில், அறிவில், அனுபவத்தில் மூத்தவர்கள் முன்னிலையில் பணிவுடன் நடந்துகொள்ளுங்கள்.
- எல்லா நிலையிலும் மனரம்மியமாக பழக கற்றுக்கொள்ளுங்கள்.
- வெளித்தோற்றம் மட்டுமல்ல, உள்ளான மனிதனும் நமது ஆள்தத்துவமும் தாழ்மையை பிரதிபலிக்கட்டும்.